பக்கங்கள்: 09

# காலைக்கதிர் Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 20 சனிக்கிழமை 08.04.2023 கதிர் 149

# சட்டவிரோத சட்டத்தை மீளப்பெற வேண்டும்

## தொழிற்சங்கத்தினர் வலியுறுத்து திங்களன்று மாநாட்டுக்கும் அழைப்பு

ஆட்சியாளர்களால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை மீளப்பெறவேண்டும் என்று தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளதோடு, குறித்த சட்டமூலத்திற்கு எதிராக எதிர்வரும் திங்களன்று மாபெரும் மாநாடொன்றை முன்னெடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அக்கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

## இனி இது ரகசியம் அல்ல!

மறதி ஒரு வியாதி. அது இருந்தால் பெரும் துன்பந்தான். மற்றொரு புறத்தில் அது இல்லாவிட்டாலும் துன்பம்தான். படிக்கிற மாணவர்களுக்கு மறதி பெரும் துன்பம். அதேசமயம் காதலில் தோல்வியடைந்தவர்களுக்கு மறதி வரப்பிரசாதம். அரசியலைப் பொறுத்தவரையிலும் மறதி மக்களுக்கு ஒரு வரப் பிரசாதம். இல்லாவிட்டால் ஒரு தலைவரைக்கூட மதித்து வாக்குப்போட முடியாத நிலை வரும். தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மறதி வரமா சாபமா என்பதை அவர்களேதான் தீர்மானிக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் எதை ஞாபகம் வைத்திருக்கவேண்டுமோ அதை மறந்துவிடுவார்கள். எதை மறக்கவேண்டுமோ அதை ஞாபகம் வைத்திருப்பார்கள்.

தேர்தல் அறிவித்ததும் தமிழர்களின் ஒற்றுமைக்கு யார் குந்தகம் விளைவிக்கிறார்கள் என்று வாய் கிழியக் கத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அதை மறந்துவிட்டார்கள். நீங்கள் போய்க் கேட்டால் அப்படி நான் பேசினேனா

## உயிர்த்த ஞாயிறு வாரத்தில்
# கிறிஸ்தவ தேவாலயப் பாதுகாப்பு அதிகரிப்பு

நாளை உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி நாட்டிலுள்ள தேவாலயங்களின் பாதுகாப்பை அதிகரிக்க வியாழக்கிழமை முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ்மா அதிபரால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளையடுத்து மேற்படி பாதுகாப்பு அதிகரிக்கப்படுகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுமாக இருந்தால், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை அழைக்கும் இயலுமை காணப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

ஏதேனும் தேவைகள் காணப்படுமானால், இராணுவ அதிகாரிகளையும் அழைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (02)

# உயர்தர விடைத்தாள் மதிப்பீடு 50 நாள்கள் தாமதம்

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 50 நாட்களாகத் தாமதடைந்துள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொடுப்பனவு போதாது என்று கூறி ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் விடைத்தாள்களைத் திருத்த முன்வராமையே இதற்குக் காரணம் என்று பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் கலந்துகொள்வது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இதுவரை தமக்கு அறிவிக்கவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

மதிப்பீட்டுப் பணிகளுக்காக சுமார் 5 ஆயிரம் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறான பின்புலத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைந்துள்ளமையால், சாதாரண தரப் பரீட்சையை திட்டமிட்ட தினத்தில் நடத்துவதிலும் சிக்கல் காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (02)

# அத்துமீறி வழிபட அனுமதி இல்லை

## ஜனாதிபதி இப்படித் தெரிவிப்பு



வடக்கில் அனைத்து மதத்தினருக்கும் வழிபாட்டு உரிமை உண்டு. அதற்காக அத்துமீறி வழிபட அல்லது வழிபாட்டுச் சின்னங்களை வைக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வெடுக்குநாறி மலையில் சிவலிங்கத்தை பிரதிஸ்டை செய்வதற்கான

# நழுவுகிறது மொட்டு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே பொது ஜன பெரமுன இருப்பதாக அக்கட்சியின் செயலாளர் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

"நாட்டுக்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

# அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அமைச்சரவையில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாது என்று ஊடக தகவல் மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் ரந்த பண்டார திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான பெரும்பான்மை

# தொழிலாளர்கள் பிரச்சினை: தோட்டத்துடன் இதொக பேச்சு



தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்தின், நிர்வாகத்திடம் மலையகத்தின் பிரதான தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர்

# கொழும்பு - காங்கேசன் ரயில் சேவை இனி அடுத்த ஜனவரியில்தான் சாத்தியம்

(தன்வீன்)

கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறைக்கான நேரடி தொடருந்து சேவை அடுத்த ஆண்டின் ஜனவரி மாதத்திலேயே மீளத்தொடங்கப்படும் என்று இலங்கை தொடருந்துத் திணைக் களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் இந்தி பொலகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு தொடருந்து மார்க்கத்தில் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப்பணிகளால், ஜனவரி 5ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை - காங்கேசன்துறைக்கு இடையிலான நேரடி தொடருந்து சேவை அநுராதபுரம் புகையிரத நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

வவுனியா முதல் காங்கேசன்துறை வரையிலான யாழ். ராணி தொடருந்து சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மார்ச் 27ஆம் திகதி முதல் ஓமந்தையுடன் அதுவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான பசேவை ஜூலை மாதமளவில் முன்னெடுக்கப்படும்.

எனினும், அநுராதபுரத்தில் இருந்து மஹவ சந்தி வரையிலான மார்க்கத்தில் மற்றுமொரு திருத்தப்பணி ஜூலை மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படவுள்ளதால், ஜனவரி மாதத்திலேயே கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை நேரடி புகையிரத சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் - என்றார்.

# குடாநாட்டில் தேநீர், ரொட்டி விலை குறைப்பு



யாழ். மாவட்டத்தில் இன்று முதல் தேநீர், பால் தேநீர், ரொட்டி (பரோட்டா) ஆகியவற்றின் விலைகள் 10 ரூபா குறைக்கப்படுகின்றது என்று உணவக உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் வெள்ளிக்கிழமை மாலை உணவக உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக சங்கத்தலைவர் ஜெயசேகரம் அறிவித்தார்.

ஒவ்வொரு உணவு நிலையங்களுக்கு ஏற்ப விலைகளில் வேறுபாடு காணப்படுவதால் அந்தந்த விலைகளில் இருந்து 10 ரூபா குறைத்து விற்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்துக்குபின்னர் உணவுப்பொதிகள், வேறு உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மருந்து தட்டுப்பாடுக்கு இரு மாதங்களுள் தீர்வு

## சுகாதார அமைச்சர் உறுதி



இரண்டே மாதங்களுக்குள் மருந்துகளுக்கான தட்டுப்பாடு முழுமையாக நிவர்த்தி செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டி - பல்லேகலையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார்.

நியாயமான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் நடவடிக்கைக்கும் செல்லவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி, அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற செயற்படும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, 90 சதவீதமானோர் ஒத்துழைப்பு வழங்குவதை, சமூக ஊடகங்கள் வாயிலாக தாம் பார்க்கிறார் எனவும் அமைச்சர் கெஹலிய மேலும் தெரிவித்தார். (02)

# அமைச்சர் கஞ்சனவிடம் வாக்குமூலம் சி.ஐ.டி. பதிவு



பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நாளில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்

# ஜனநாயகப் போராட்டத்தை இரும்புக் கரத்தால் அடக்கவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதாக தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சர்வதேச சமூகத்திற்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சித்தால் ஜீஎஸ்பி வரிச்சலுகை இல்லாமல் போகுமென்ற அச்சம் இப்போது ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வடமராட்சியில் வெள்ளிக்கிழமை மாலை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் பொருளாதாரச் சிக்கல் இந்த நாட்டை பீடித்திருக்கின்றது. அதிலிருந்து நாட்டை மீட்க போகிறார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார். அவ்வாறு நாடு மீண்டதாக ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால் மிக விரைவிலே நாடு மிக மோசமான பொருளாதார சூழ் நிலைக்கு செல்ல இருக்கிறது.

அப்படியான வேளையிலே திரும்பவும் மக்கள் போராட்டங்கள் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் அதை கட்டுப்படுத்துவற்காக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக்கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றனர்.

கடந்த காலங்கள் போன்று மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஏற்படுகிற பொழுது அதனைக் கட்டுப்படுத்த அல்லது ஒடுக்கு-வதற்கு தற்போது ஜனாதிபதியின் கையில் இருக்கின்ற சட்டங்கள் போதாது என்று அவர் கருதுகின்றார்.



அதேநேரம்

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினரின் மனைவி மீது பட்டப்பகலில் வாள்வெட்டு

பேருவளை உள்ளூராட்சி சபையின் முன்னாள் உறுப்பினர் சமித கவிரத்னவின் மனைவி வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை - ஹெட்முல்ல பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை பால் விற்பனை செய்து கொண்டிருந்த போது அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் நடந்த உடனேயே, சந்தேகநபரைக் கைது செய்த பொலிஸ் குழு, ஐந்து அடி நீளமுள்ள இரத்தக் கறை படிந்த கத்தியையும் கைப்பற்றியது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பேருவளை பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்த பொலிஸார், தாக்குதலுக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டனர்.

தாக்குதலுக்குள்ளான பெண் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது என்று வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். சந்தேகநபரை களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (02)

# குழந்தைகளிடம் தங்கம் திருட்டிய பெண் கைது

அழுது கொண்டிருந்த சிறுவர்களை ஆறுதல் படுத்துவதற்காக முன்பள்ளி ஒன்றுக்குச் சென்று சிறுவர்களின் தங்க பஞ்சாயுதங்களை இரகசியமாக திருடிக்கொண்டிருந்த பெண்ணொருவரை ஆனமடுவ பொலிஸ் பிரிவின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய ஆலங்குளம், ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கைதான பெண் ஆலங்குளம், வட்டேகெதர உள்ளிட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளுக்குச் சென்று அங்கு அழுதுகொண்டிருக்கும் குழந்தைகளை ஆறுதல் படுத்துவதாகச் செல்வதாகக் கூறி சில காலமாக இந்தப் பஞ்சாயுதங்களைத் திருடி வந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண் எட்டு சிறுவர்களின் கழுத்தில் இருந்த தங்கபஞ்சாயுதங்களையாருக்கும் தெரியாமல் பல முறை திருடிச்சென்றுள்ளதாகவும், மற்ற பஞ்சாயுதங்களும் இதே போல் திருடப்பட்டுள்ளனவா என விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# பெண் உட்பட மூவரின் சடலங்கள் நேற்று மீட்பு

வெவ்வேறு இடங்களில் பெண்ணொருவர் உட்பட மூவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இரத்தக் காயங்களுடன் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

30 வயது மதிக்கத்தக்க இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார், சடலத்தை நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் குளம் ஒன்றிலிருந்து வயோதிபப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் (வயது 73) கடந்த மாதம் வீட்டில் தற்கொலை செய்தார் என்றும், அதன் பின்னர் குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்து வந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தனமல்வில - பலஹருவ வாவியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பலஹருவ பிரதேசத்தில் வசிக்கும் 67 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் இருந்த வாவிக்கு அருகில் அவரது சைக்கிள் கண்டெடுக்கப்பட்டதுஎன்றும், மரணத்துக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

# மது நிலையங்கள் ஏப்ரல் 13, 14 பூட்டு

சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மதுபான நிலையங்கள் மூடப்படும் என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின் பிரகாரம் சட்டவிரோதபோதைப்பொருள் மற்றும் மதுபானங்களைக் கைப்பற்றுவதற்கும், அனுமதியளிக்கப்பட்ட மதுபானம் விற்பனை செய்யப்படும் இடங்களைக் கண்காணிப்பதற்கும் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் 1,200 மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று இலங்கை மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 13 உதவி மதுவரி ஆணையாளர் பிரிவுகள், 31 மதுவரித் திணைக்கள அதிகாரி பிரிவுகள், 5 மதுவரித் திணைக்கள சிறப்பு நடவடிக்கை பிரிவு கள் மற்றும் 57 மது வரி நிலையங்களின் கீழ் இந்த அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மதுபானக் குற்றங்கள், போதைப்பொருள் குற்றங்கள் மற்றும் புகையிலை குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்கள் பெறுவதற்காக மதுவரித் திணைக்களத்தின் செயற்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டுள்ள 1913 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக வழங்க முடியும் என்றும் மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (02)

# பிடிபட்ட இந்தியப் படகு குருநகரை அடைந்தது

(ந.லோகதயாளன்)



இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்ததால் கைப்பற்றப்பட்டபின்னர் அரசுடமையாக்கப்பட்டு குருநகர் மீனவர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட படகு வெள்ளிக்கிழமை குருநகரை வந்தடைந்தது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் கடற்படையால் பிடிக்கப்பட்டு மயிலிட்டித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது 3 படகுகளை வடக்கு மீனவ அமைப்புகளிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

இவ்வாறு 3 சங்கங்களிற்கு வழங்கப்பட்ட படகில் ஒன்றே நேற்றைய தினம் குருநகர்ப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டுநங்கூரம் இடப்பட்டுள்ளது.

இதேநேரம் முல்லைத் தீவிற்கு வழங்கப்பட்ட படகு 3 நாள்களிலேயே கடலில் முழுமையாக மூழ்கிவிட்டது.

இதேநேரம் 3ஆவது படகு வழங்கப்பட்ட சங்கம் தமிழக மீனவர்களின் படகு தமக்கு வேண்டாம் எனத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

# கஜமுத்துக்களுடன் குடும்பஸ்தர் கைது!

சட்டவிரோதமான முறையில் 5 கஜமுத்துக்களை வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை - கல்கடுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசறை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக்கிடைத்ததகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர்.

சந்தேகநபர்மேலதிகவிசாரணைகளுக்காக பதுளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (02)

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்றுகூடக் கேட்பார்கள். ஒற்றுமைதான் பலம், அதைத் தமிழர்கள் விட்டுக்கொடுக்கக்கூடாதுஎன்றார்கள். அதை நிரூபிப்பதற்காகவே தமிழ் அரசுக் கட்சிக்கு வாக் களிக்கக்கூடாது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத்தான் வாக்களிக்கவேண்டும் என்றார்கள். இப்போது அவர்களுக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்குமா என்று தெரியவில்லை.

அண்மையில் வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி லிங்க ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் போராட்டம் நடத்துவதற்கு என 7 கட்சிகள் 12 பொது அமைப்புக்கள் கூட்டம் போட்டபோது மறந்தும்கூட யாரும் ஒற்றுமை பற்றி வாயே திறக்கவில்லை. ஒற்றுமை பற்றி வரிந்து கட்டிக்கொண்டு திரிந்த தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயகக்க கூட்டணியின் தலைவர்களும் கூட்டத்தில் இருந்தபோதும் ஒற்றுமையின்மை குறித்து யாரும் அலட்டிக்கொள்ளவில்லை.

அந்தக் கூட்டத்தில் எதை வைத்துப் போராட்டம் நடத்துவது என்பதில் ஒரு நீண்ட விவாதம் நடந்தது. கூட்டம் கூடியது என்னவோ வெடுக்குநாறி மலைய விவகாரத்தையொட்டித்தான். ஆனால், அதை மட்டும் வைத்துப் போராட்டம் நடத்துவதா அல்லது ஒட்டுமொத்த மாகத் தமிழ் இனத்தின் மீதான ஒடுக்குமுறைகளை முன்வைத்து நடத்துவதா என்பது தொடர்பில் அந்த விவாதம் நீண்டது. அதில் ஒரு நியாயம் இருக்கவும்தான் செய்தது. ஏனெனில் வெடுக்குநாறி மலைவிவகாரம்சைவசமயம் சார்ந்தது, அதே காலப் பகுதியில் கச்சதீவில் புத்தர் சிலை வைத்தமை தொடர்பிலும் சர்ச்சைகள் இருந்தது. கூடியிருந்த தலைவர்களில் கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். எனவேவெடுக்குநாறியை மட்டும் முன்னிறுத்திப் போராடுவது சரியல்ல என்று அவர்களுக்குத் தோன்றியதில் நியாயம் உண்டு.

கிட்டத்தட்ட 3, 4 மணி நேரமாக அலசி ஆராய்ந்த பின்னர் ஒரு முடிவுக்கு வந்து போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்தார்கள். அந்தப்போராட்டத்தை எப்போது நடத்துவது என்று கிழக்கில் இருப்பவர்களுடனும் பேசி ஒரு முடிவுக்கு வந்ததும் அறிவிப்போம் என்று கூறிவிட்டுப் போனவர்கள்தான். எந்தப் பதிலையும் ஒரு வார காலமாகக் காணவேயில்லை.

மறதி: தமிழ் இனத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு சாபக்கேடுதான்.

- இடிமின்னல் -

## சட்டவிரோத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்த விரிவுரையாளர் சாருத்த இலங்கசிங்க இது குறித்துத் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் கொண்டுவருவதற்குத் தீர்மானித்துள்ள சட்டமூலத்தினை மீளப்பெறுமாறு கோருகின்றோம். இவ்வாறு அமுலாக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் நாட்டில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதி ஒருவரும் இல்லை. தற்போது வெட்கமற்ற முறையில் பிற்போடப்பட்டுள்ள சட்டமூலத்தினை அமுலாக்கும் திட்டத்தினை கைவிடுமாறே கோருகின்றோம்.

இந்த நிலையில் குறித்த சட்டமூலத்தினைக் கண்டிக்கும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை மாநாடொன்றைநடத்தவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த மாநாட்டில் ஜனநாயகத்தினை விரும்பும் நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கத்தினரும், பொதுமக்களும் பங்கேற்குமாறு அழைப்பு விடுகின்றோம் - என்றார்.

## அத்துமீறி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கை தொடர்பில் அவரிடம் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில்மதரீதியில்அண்மைக் காலத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது வாக்குறுதியளித்தார்.

இந்தப் பிரச்சினைகளை வைத்து அல்லது பிரச்சினைகளை மேலும் தூண்டிவிட்டு எவரும் அரசியல் இலாபம் தேட முயலக்கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

வடக்கில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் வழிபாட்டு உரிமை உண்டு. அதை எந்தத் தரப்பும் கேள்விக்குட்படுத்த முடியாது. ஆனால், அத்துமீறிவழிபட அல்லது வழிபாட்டுச் சின்னங்கள் வைக்க முடியாது - என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நீதிமன்ற வழக்கில் ஒரு பிரச்சினை இருந்தால் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய அரசு நடவடிக்கை எடுக்கும் - என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும், வடக்கில் மதரீதியில் எழுந்துள்ள பிரச்சினைகளை வளர விடாமல் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரில் விரைந்து தீர்வு காண்போம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். (02)

## அமைச்சரவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பலம் எம்மிடம் இருக்கிறது. எதிர்க்கட்சியினர் இணைய வில்லை என்பதற்காக இந்த ஆட்சி வீழ்ச்சியடைப் போவதில்லை.

ஆட்சியாளர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் நடவடிக்கைகள் வெற்றிகரமானவை என்று எண்ணினால், விரும்பும் எவரும் எம்முடன் இணையலாம்.

இணைய விரும்புபவர்களை அச்சுறுத்துவதற்காகவே அவர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்என்று கூறுகின்றனர். அவ்வாறு பணத்தைக்கொடுத்துநாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

ஆட்சியாளர்கள் அரசியல் விவகாரங்களுக்கு முன்னுரிமையளிக்கவில்லை. மாறாகநாட்டின்முன்னேற்றம் குறித்தே அவதானம் செலுத்துகின்றனர். எனவே அமைச்சரவை மாற்றங்களையும் இப்போதைக்கு இடம்பெறாது - என்றார்.

## தொழிலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர், தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு காத்திரமான நடவடிக்கை அவசியம் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எடுத்துரைத்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும், மத்துரட்ட பெருந்தோட்ட நிர்வாகத்தினருக்கும் இடையிலான நேரடி கலந்துரையாடல் இராகலை நகரிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (02)

## ஜனநாயகப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தினால் சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை மீறுகிறதாக அது அமையும். அப்படி நடந்தால் ஐரோப்பிய ஒன்றியத்தினால் கொடுக்கப்படுகின்ற ஜீஎஸ்பி வரிச் சலுகைகூட இல்லாமல் போகின்றநிலைமைஏற்படும்.

அதனாலேயேபுதியதொரு சட்டத்தைக் கொண்டுவந்து நல்ல விடயத்தை தாங்கள் செய்வது போலக் காட்டி மிக மிகமோசமானஒருசெயலைச் செய்ய முனைகின்றனர். குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தைநீக்குவதாகக் காட்டிக்கொண்டு அதனை விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக்கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

அதாவது பயங்கரவாத தடைச்சட்டத்தைநீக்குகிறேன் என்றுஒருமாயத்தோற்றத்தை காட்டிக் கொண்டும் சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய சட்டத்தையே கொண்டு வருகிறேன் என்பதான தோற்றத்தைஏற்படுத்தஇந்தமுயற்சி எடுக்கப்படுகிறது.

புதியபயங்கரவாதச்சட்டம் கொண்டு வரப்படுவதற்கான உண்மையான நோக்கம், மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக அல்லது ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தால் அதனை இரும்பு கரம்கொண்டுஅடக்குவதான். அதற்காகத்தான் முன்கூட்டியே இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு ஆட்சித் தரப்பு முனைந்திருக்கின்றது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரசமைப்பை மீறுகின்றது. அவ்வாறு அரசமைப்பு மீறுகின்றது என்று சொல்லியோ அல்லது வேறு காரணங்களைக் கூறியோ நீதிமன்றம் சென்றாலும் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்று நீதிமன்றம்சொல்லலாம். அதே நேரம் மக்கள் கருத்தெடுப்பும் தேவை என்றும்கூட நீதிமன்றம் சொல்லலாம்.

இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் மக்கள் கருத்துக் கணிப்பைத் தவிர மற்ற அனைத்தையும் ஆட்சியாளர்கள்செய்யலாம். ஏனெனில் ஆளுங்கட்சியில் மாத்திரமல்ல எதிர்க்கட்சியில் இருக்கின்ற சில தரப்புக்களும் ஆட்சித்தரப்புடன் இணையப் போவதாக அறிகின்றோம்.

இந்த அரசுக்கு இப்பொழுது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சிகளில் இருக்கின்ற பலர் கட்சி தாவினால் அந்தப் பலம் கிடைத்துவிடும். எனவே நீதிமன்றநடவடிக்கையின்மூலம் மட்டும்நாம்இந்தச்சட்டத்தைத் தடுக்கமுடியாது. ஆகவேதான் அரசின் இந்தப் புதிய சட்டம் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை மீறுகிறது என்பதை நாம் தெளிவாகச் சொல்லுகின்றோம்.

நாம் மட்டுமல்ல இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்இருந்துபலரும்இந்தவிடயங்களைக் கூறுகின்றனர்.

இதனால் ஜீஎஸ்பி வரிச்சலுகை கிடைக்காமல் போகலாம் என்பதும் தெரிந்த விடயம். அது ஒன்றுதான் இந்தசட்டமூலம்இயற்றுகின்ற அரசின் யோசனையை மாற்றலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

அதேபோல ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச நிறுவனங்களும்கூடஇதனுடைய தார்ப்பரியத்தை அல்லது மோசமான தன்மையை உணர்ந்து அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு நாங்கள் எப்படி முழு நாட்டிலும்எழுச்சியைஏற்படுத்தினோமோ அதே போல் இந்த மோசமான சட்டத்தை தடுப்பதற்கும் மக்களிடையே சென்று மக்கள் மத்தியில் விளக்கங்களை கொடுத்து ஒரு எழுச்சியை ஏற்படுத்த முனைகிறேன்.

மக்களிடத்தே இந்த விடயம் தொடரபில் கலந்துயாடல்களை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினால், மக்கள் எழுச்சியை காட்டுவோமாக இருந்தால் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றாமல்தடுக்கலாம்என்று கருதுகின்றேன் - என்றார்.

# அலரி மாளிகை முன் சொகுசு கார் விபத்து



கொள்ளுப்பிட்டி அலரி மாளிகைக்கு முன்பாக சொகுசு கார் ஒன்று வெள்ளிக்கிழமை காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதியில் சென்று கொண்டிருந்த வாகனத்தைச் சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காரில் பயணித்தவர்களுக்குஎவ்வித காயமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் காரின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அமைச்சர் கஞ்சனவிடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால்தல்துவ தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக சம்பவத்தின் சாட்சியாளர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும் அவர் கூறினார்.

எரிபொருள் பௌசர்கள் புறப்படுவதற்குச்சந்தர்ப்பத்தை வழங்காமை, விமான நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்துக்குத் தடை ஏற்படுத்தியமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதனூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணைகள் இடம் பெறுகின்றன.

எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு மூன்று தனியார் நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பதாகத் தெரிவித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் கடந்த நாட்களில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்ததுடன், சுமார் 20 ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறையும் வழங்கப்பட்டது. (02)




## புலத்சிங்களவில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் நான்கு பேர் கைது

புலத்சிங்களதெஹிகவல பிரதேசத்தில் புதையல் தோண்டிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலில் புலத்சிங்கள பொலிஸார் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொரலஸ் கமுவ, மத்துகம மற்றும் புலத் சிங்கள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நவபுரத்தில் சுண்ணக்கல் அகழ்ந்த 2 பேர் வாகனங்களுடன் கைது





சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி - நவபுரம் பகுதியில் வியாழக்கிழமை பிற்பகல் சட்ட விரோதமாக சுண் ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் - அகழ்விற்கு பயன்படுத்திய வாகனங்கள் இரண்டினையும்பொலிஸார் கைப்பற்றினர்.

நவபுரம் பகுதியில் சுண்ணாம்புக் கல் அகழ்வு இடம்பெறுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிபாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினர் அங்கு சென்று சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன் வாகனங்களையும் கைப்பற்றினர்.

கல் அகழ்வதற்கு பயன்படுத்திய ஜே.சி.பி வாகனம் மற்றும் சுண்ணாம்பு கல்லை ஏற்றிய நிலையில் காணப்பட்டடிப்பர் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

# யாழ். மரியன்னை தேவாலயத்தில் புனித வெள்ளி கூட்டுத் திருப்பலி







இலங்கைவாழ் கிறிஸ்தவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை புனித பெரிய வெள்ளிகூட்டுத்திருப்பலியில் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டுத் திருப்பலியை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் கூட்டுத் திருப்பலி ஆராதனைகள் இடம்பெற்றன.

அந்தவகையில் வரலாற்று சிறப்புமிக்க யாழ். மரியன்னை பேராலயத்தில் புனித வெள்ளி கூட்டுத்திருப்பலி நேற்று காலை இடம் பெற்றது.

இந்தக் கூட்டுத்திருப்பலி யாழ். மரி யன்னை பேராலயத்தின் பங்குத் தந்தையும். மறைமாவட்ட ஆயரும் ஆகிய கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தார்.

இதில் பலபாகங்களில் இருந்து வருகைதந்த கிறிஸ்தவமக்கள் கலந்து கொண்டு ஆசிர்வாதத்தை பெற்றுச்சென்றனர்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பெரிய வெள்ளி ஆராதனைகள்



மட்டக்களப்பில் கிறிஸ்தவதேவாலயங்களில்பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பெரியவெள்ளிஆராதனைகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

2019ஆம்ஆண்டுஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் உல்லாசவிடுதிகளைஸர்கான் காசிமின் தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் குறிவைத்து தற்கொலைக் குண்டுதாக்குதலில் நூற்றுக்குமேற்பட்டோர்உயிரிழந்ததுடன் பல பேர் காயமடைந்ததுடன் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாக்குதலில் சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன்32பேர்படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், கிறிஸ்தவர்களின் கடவுளான இயேசுநாதர் நேற்று சிலுவையில் அறையப்பட்ட பெரிய வெள்ளி தினத்தில் தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் இடம்பெற்ற நிலையில், மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட அதிரடிப்படையினர் பொலிஸார் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆராதனைகள் இடம்பெற்றன. இதில் பெரும் திரளான கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, எதிர்வரும் 9ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை உயிர்த ஞாயிறு தினம் வரையில்தேவாலயங்களில் இடம்பெறும் ஆராதனைகளின் போது தொடர்ந்து பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் எனபொலிஸார்தெரிவித்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சீனாவின் திட்டம் ஆபத்தானது

இலங்கையின் தெய்வேந்திர முனையத்தில் ராடர் தளமொன்றைஅமைப்பதற்குசீனாமுன்மொழிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை கவலையளிக்கிறது. அதுவும்கடன்மறுசீரமைப்புடன்தொடர்புபடுத்திவேறு இந்தச் செய்திகள்வெளியாவது அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது.

பிரிட்டனில் இருந்த வெளியாகும் பத்திரிகையினால் வெளிப்படுத்தப்பட்ட இந்தவிடயம்பின்னர்இந்தியாவிலிருந்து வெளியாகும் 'த எகனொமிக் டைம்ஸ்' ஊடகத்திலும் வெளியாகி உள்ளது. .

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் கடற்படை இருப்பு மற்றும் மூலோபாய மேற்பார்வையை செய்யும் நோக்கில், இலங்கையின் தெற்கில் ராடர் தளத்தை அமைப்பதற்கு சீனா முன்மொழிந்துள்ளது என்று த எகனொமிக் டைம்ஸ் தெரிவித்திருக்கிறது. இது இந்தியாவின் நியாயமான கவலை.

இலங்கை விடயத்தில் இந்தியா நெருக்கமான நண்பன் என்கிற வகையில் தொடர்ந்து செயலாற்றி வருகையில், அதுவும் குறிப்பாக கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிக் காலங்களில் இந்தியா மிக நெருக்கமாகச் செயலாற்றி வருகையில் இந்தச் செய்தி அதிக தாக்கமுள்ளதாகவே அமைகின்றது.

சீனாவின் குறித்த ராடர் தளம் தெய்வேந்திர முனைத்தினை அண்மித்துள்ள காடுகளுக்குள் அமைக்கப்படும் பட்சத்தில் இந்திய கடற்படையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதில்சீனாகவனம்செலுத்தும்அதேவேளையில், பிராந்தியத்தில் டில்லியின் மூலோபாய பெறுமானங்கள் கண்காணிக்கப்படும் என்றும் 'த எகனொமிக் டைம்ஸ்' செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பில் இருந்து தென்கிழக்கே சுமார் 155 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலங்கையின் தெய்வேந்திரமுனையை அண்மித்துள்ள காடுகள் இந்த திட்டத்தை வழிநடத்துவதற்கு ஏதுவான பகுதியென சீன அறிவியல் கற்கை நிலையத்தின் விண்வெளி தகவல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட சீனாவின் ராடர், தளமானது தெய்வேந்திர முனையிலிருந்து தென்மேற்கே 1700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஐக்கிய இராச்சியத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள டியாகோ கார்சியாவில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளத்தில் இராணுவ நகர்வுகளைக் கண்காணிக்கும் திறனையும் கொண்டிருக்கும்.

அதுமட்டுமன்றி, சீனாவின் முன்மொழிவுக்கு ஏற்ப குறித்த ராடர் தொகுதி பீஜிங்கால் அமைக்கப்படும் பட்சத்தில் அது இந்திய பாதுகாப்பு படைகளின் நிலைகளுக்கு தீங்கு விளைவிக்கும் என்று குறித்த முன்மொழிவு தொடர்பில் அறிந்தவர்களை மேற்கோள்காட்டி இந்தியப் பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

குறிப்பாக, இலங்கையில் சீனாவின் முன்மொழியப்பட்ட ராடர் தளம் நிறுவப்பட்டு கண்காணிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றால் குறித்த ராடர் தளத்திற்கு கிழக்கே அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் வரையில் கண்காணிப்பு வலையத்துக்குள் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சீனா இலங்கையை தனது இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்த ஒருபோதும் அனுமதிக்காது என்று கொழும்பு தொடர்ந்து சொல்லிவந்த நிலையில் இந்தப் புதிய நகர்வு இலங்கையில் பூகோள அரசியலின் தாக்கத்தை மேலும் தீவிரப்படுத்தும். அத்தோடு எந்தப் பக்கம் சாராத கொள்கையைக் கொண்டிருப்பதாக ஆட்சியாளர்கள் கூறுவதையும் கேள்விக்கு உள்ளாக்கும். இதன் மூலம் இந்த நாடு இன்னும் பேராபத்தையும் சவால்களையும் சந்திக்க நேரும். எனவே சீனாவின் திட்டத்திற்கு ஆட்சியாளர்கள் அனுமதியளிக்காமல் இருப்பதே சிறந்தது.

# 2019 இல் நியூஸிலாந்திற்கு கடல்பயணம் செய்த 248 இலங்கையர்கள் காணாமற்போனார்களாம்!

## அந்நாட்டு ஊடகம் தகவல்

2019 இல் நியூஸிலாந்திற்கு ஆபத்தான கடல் பயணத்தைமேற்கொண்டஇலங்கையர்கள் குறித்து புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள்காணாமல்போயிருக்கலாம் என நியூஸிலாந்தின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நியூஸிலாந்தை சென்றடைவதற்கு முயற்சி களை மேற்கொண்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த அந்த நாட்டு அரசாங்கத்தின் ஆவணங்களில் இலங்கையைசேர்ந்த 248பேருடன் காணப்பட்ட மீன்பிடிப்படகை மீண்டும் காணவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதாக டிவிஎன்ஜட் தெரிவித்துள்ளது.

2019 ஜனவரி 12 ஆம் திகதி ஆள்கள் பயணிக்கும் படகாக மாற்றப்பட்ட 27 மீற்றர் மீன்பிடிப்படகு இந்தியாவிலிருந்து 248 தமிழர்களுடன் புறப்பட்டது அந்த படகு ஆஸ்திரேலியா அல்லது நியூஸிலாந்தை சென்றடைய முயற்சி செய்திருக்கலாம் என நியூஸிலாந்து அரச ஆவணங்கள் தெரிவித்துள்ளன..

அதன்பின்னர் அந்த படகிலிருந்தவர்கள் குறித்து எந்த தகவலும் இல்லை என நியுசிலாந்தின் ஆவணங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகளின்போதுகைதுசெய்யப்பட்ட பிரபுதண்டபாணி என்றநபர் குறிப்பிட்ட படகு நியுசிலாந்திற்கே சென்று கொண்டிருந்தது என இந்திய பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

பெருமளவுஎண்ணிக்கையில் நியுசிலாந்திற்குள் நுழைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்த ஆவணங்களில் - தமிழர்கள் கேரளாவிலிருந்து நியுசிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவிற்கு செல்வதற்கு மேற்கொண்ட முயற்சி குறித்து காணாமல்போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

நியுசிலாந்திற்கு செல்ல முற்பட்ட இலங்கை அகதிகள் படகு குறித்து டைம்ஸ்ஒவ் இந்தியாவில் வெளியாகியுள்ள கட்டுரையில் புதுடில்லியின் மதங்கீர் காலணியில் தங்கியிருந்த இலங்கை தமிழ் அகதிகளே குறித்த படகில் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை உடன்படிக்கை காரணமாக இந்த கொலனி உருவானது இந்த அகதிகள் மிகமோசமான நிலையில் வாழ்ந்தார்கள் என இந்த கட்டுரையை எழுதிய கேபிசைகிரான் என்பவருக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்கள் பயணத்தை பாது காப்பு தரப்பினர் கண்டு பிடிப்பதை தவிர்ப்பதற்காக 25 நாட்கள் நீடித்த படகு பயணத்தின்போது அவர்கள் ஜிபிஎஸ் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்த்துள்ளனர்.

இந்த படகு நீரில் மூழ்கியிருக்கவேண்டும் அல்லது இலங்கை அதிகாரிகள் இவர்களை கைதுசெய்திருக்க வேண்டும் இதனால் அவர்களிற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்

எப்பிடிபார்த்தாலும் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொதுமக்களுக்கு இடையூறு இல்லாதவாறு நடைபாதை வியாபாரங்களுக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 08

தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வியாபாரங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகள் நடைபாதை வியாபாரிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என தேசிய பாதுகாப்புதொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்புத்துறை வியாபாரச் சங்கம் மற்றும் நடைபாதை வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றின்பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது நடைபாதை வியாபாரிகளுடன் சுமுக மாக கலந்துரையாடிய சாகல ரத்நாயக்க , அவர்க ளது பிரச்சினைகளை கேட்டறிந்துக்கொண்டதோடு பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு நடைபாதை வியாபாரிகளின்பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார்.

நடைபாதை வியாபாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிப்பதாகவும், இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதற்கான குழுவொன்றை நியமிப்பதாகவும் சாகல ரத்நாயக்க உறுதியளித்தார்.

இதுகுறித்து பொலிஸ்மா அதிபருடன் கலந்தாலோசித்த சாகல ரத்நாயக்க, நடைபாதை வியாபாரிகள் எதிர்கொள்ளும் சிலபிரச்சினைகளுக்குஉடனடி தீர்வை பெற்றுக்கொடுத்தார். இதன்போதுநடைபாதைவியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைய அவர்களுக்கான அடையாள அட்டை ஒன்றை விநியோகிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் சீ.டி விக்கிரமரத்ன, நடைபாதை வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.




# நான்கு பிள்ளைகளுக்கு மேல் பெறுகின்ற தமிழ்த் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை

## சைவ மகா சபை வழங்கியது

நான்கு பிள்ளைகளுக்கு மேல் பெற்று, தமிழில் பெயர் வைக்கும் தம்பதியினருக்கு ஊக்க தொகை வழங்கும் செயற்திட்டத்தை சைவ மகா சபை பங்குனி உத்தர நாளான கடந்த புதன்கிழமை ஆரம்பித்துள்ளது.

அந்நிலையில் சமய, சமூக, மது ஒழிப்பு செயற்பாட்டாளரான சாந்தை பண்டதரிப்பைசார்ந்த கடம்பன் அசுவினி தம்பதியினர் ஐந்தாவது குழந்தையான சிவாத்மிகலனை பெற்றெடுத்தமைக்காக ஊக்க தொகை மற்றும் சத்துமா என்பன சைவ மகா சபை தலைவர் சண்முகத் தினத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

5 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் கொரோனா பொருளாதார நெருக்கடியால் சிறிது காலம் தடைப்பட்டு இருந்தது.

இந்தத் திட்டத்துக்கு பங்களிக்க விரும்பும் நல்லுள்ளங்கள் சைவ அறப் பணி நிதிய வங்கி கணக்கு ஊடாக உதவ முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதாகக்கூறிப் பணம் பறிப்பு!

சமுர்த்தி உதவிக் கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் இரட்டிப்பாக அதிகரித்து வழங்குவதாக தெரிவித்து தனிமையில் இருந்த சிறப்புத் தேவையுடைய வயோதிபப் பெண்ணிடம் இனந்தெரியாத ஒருவரால் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அச்சுவேலிவளலாயில்கடந்தவியாழக்கிழமை மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றுஅச்சுவேலிபொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த நபர், கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் எனத் தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தனிமையில் வசிக்கும் அந்தப் பெண் தையல் வேலையில்ஈடுபட்டுக்கொண்டிருந்துள்ளார்.

தங்களுக்கு தற்போது வழங்கப்படும் சமுர்த்தி உதவித்தொகையைஅடுத்து வரும் மாதங்களில் அரசால் இரட்டிப்பாக வழங்கவுள்ளதாகத்தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காக தாம் ஒவ்வொரு சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்தும் 20 ஆயிரம் ரூபா பணத்தினைஅறவிடுகிறோம்என்று தெரிவித்த அந்த நபர் நான்கு படிவங்களைக்கொடுத்துஅதில் கையொப்பமிட்டு வழங்குமாறு கூறியுள்ளார்.

தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை பணம் இல்லை அயலிலுள்ளவர்களிடம்பெற்றுத்தான்வழங்க வேண்டும் என்று வயதான பெண் தெரிவித்துள்ளார்.

பணம் உடனடியாக வழங்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என்று தெரிவித்த அந்த நபர் வலுக்கட்டாயமாக பணத்தினை பெற்றுள்ளார்.

'வந்திருப்பவர் முகக்கவசத்தினை அணிந்தவாறு உடனடியாக பணத்தை வழங்க வேண்டும் என்று கடுந்தொனியில்தெரிவித்தார். அதனால் எனக்கு இது மோசடி என சந்தேகம் ஏற்பட்டது. எனினும் பணத்தை வழங்காவிட்டால்எனது உயிருக்கு ஏதேனும் விபரீதம் நிகழலாம்என்றஅச்சம்ஏற்பட்டது.

பணத்தை வழங்கி விட்டு அலைபேசி ஊடாக அயலவர்களுக்கு தெரிவிக்கலாம் என்று முயற்சித்த போது எனது அலைபேசியும் களவாடப்பட்டுள்ளமைதெரிய வந்தது' என்று பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் அலைபேசிகளவாடப்பட்டமை தொடர்பாக தொலைபேசி இணைப்பு வழங்கிய நிறுவனத்திற்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் நீர்வேலி பகுதியிலும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்திலிருந்துபதிவினை மேற்கொள்ள வருவதாக தெரிவித்து பல பண மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

எனவே இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஐ.ஓ.சி.யின் 26 நிரப்பு நிலைய செயற்பாடுகள் இடைநிறுத்தம்


கொழும்பு, ஏப். 08

லங்காஐ.ஓ.சி. நிறுவனம் தனது 26 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான செயற்பாடுகளை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது.

கியு.ஆர் முறைமையில் இருந்து விலகி எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டதால்இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கியு.ஆர். குறியீட்டை மீறி தொடர்ந்து எரிபொருளை விற்பனை செய்து வந்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனையை இடைநிறுத்ததீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலக்கரியுடன் 23 கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பினுள்



நுரைச்சோலை லக்விஜயமின்உற்பத்திநிலையத்துக்குத் தேவையான நிலக்கரியுடன் 23 கப்பல்கள் இலங்கை வந்துள்ளதாக அனல்மின்நிலையமுகாமையாளர் நாலக விஜேகோன் கூறுகிறார்.

மேலும் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி இருப்பில் தற்போது சுமார் மூன்று லட்சத்து எண்பதாயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி கையிருப்பில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கட்டுநாயக்க வந்தடைந்த ஈராக் இளைஞரையும் அவரது தந்தையையும் நாடு கடத்த நடவடிக்கை

ஐரோப்பாவுக்குத் தப்பிச் செல்லும் நோக்கில் போலியான டொமினிகன் குடியரசு கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற ஈராக் இளைஞர் ஒருவரையும் அவரது தந்தையையும் நாடு கடத்த கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

18 வயதான ஈராக் தனது தந்தையுடன் டுபாயிலிருந்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 01.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இலங்கைக்குள் பிரவேசிப்பதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் உள்ளகுடிவரவுத்திணைக்கள கருமபீடத்தில் டொமினிகன் குடியரசு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை வழங்கியுள்ளார்.

இதன்போதே குறித்த கடவுச்சீட்டு போலியானது என்பது தெரிய வந்ததால் அவர்கள் இருவரையும் நாடு கடத்தத் தீர்மானிக்கப்பட்டது.






# கால்நடைகள் கடத்தியவர்கள் லொறியுடன் மடக்கிப் பிடிப்பு

கிளிநொச்சிப் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறி வாகனத்தில் கால்நடைகளைகடத்தியஇருவர் வியாழக்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து கொடிகாமம் கச்சாய் வீதி ஊடாக சாவகச்சேரிக்குள் நுழைய முற்பட்ட வேளையில் சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனையில் லொறி சிக்கியது.

கடத்திச் செல்லப்பட்ட 12 மாடுகள் மற்றும் 11,ஆடுகளை பொலிஸார் பாதுகாப்பாக மீட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்..

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலிதசெனவிரட்னதலைமையிலானபொலிஸ்குழுவினரே குறித்தஅதிரடிநடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

# இந்தியாவை கண்காணிப்பதற்காக இலங்கையில் சீனாவின் ராடர் தளம்

## இந்திய ஊடகம் தகவல்

இலங்கையின் தேவேந்திரமுனைக்கு அருகில் உள்ள காடுகளில் சீனா ராடர்தளமொன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்துவருகின்றது என இந்தியாவின் இந்தியன் டைம்ஸ் எக்கனமிக் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த ராடர் கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் அணுமின்நிலையங்களை கண்காணிக்க சீனாவிற்கு உதவியாக அமையும் என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் அக்கடமி ஒவ் சயன்சின் ஏரோஸ்பேஸ் இன்பர்மேசன் ரிசேர்ச் இந்த முயற்சிகளில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ள இந்தியாவின் இந்தியன்டைம்ஸ்எக்கனமிக் டைம்ஸ் இந்தத் திட்டம் பிராந்தியத்தில் இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு ஆபத்தானதாகக்காணப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு செல்லும் இந்திய கடற்படையின் கப்பல்களை சீனா கண்காணிப்பதற்கு இந்த ராடர் உதவும் எனத் தெரிவித்துள்ள இந்திய ஊடகம் இந்த ராடரால் கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் அணுமின் உலைகளை கண்காணிக்க முடியும் இந்த பகுதியில் எரிபொருள் மீள்நிரப்பும்நடவடிக்கைகளை கண்காணிக்கவும் முடியும் எனவும் இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தியா இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள் தொடர்பாகக் கரிசனை கொண்டுள்ளது இந்தியாவின் எச்சரிக்கைகளிற்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியதை தொடர்ந்து கடந்த வருடம் சீனாவின் யுவான் வாங் 5 கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துநின்றது.

# இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் அதிகரிப்பு

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் கடந்த மாதம் 568.3 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, இந்த வருடத்தின் முதல் 3 மாதங்களில் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் தொகை ஆயிரத்து 413.2 மில்லியன் டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# சில பிளாஸ்டிக் பொருள்களை இறக்குமதி செய்யத் தடை!

நாட்டில் ஜூன் முதலாம் திகதி முதல் சில பிளாஸ்டிக் பொருள்களை இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடியபிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் போன்ற பல பொருள்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# கடன் நிவாரண ஒப்பந்தத்தை இலங்கை எட்ட சீனா உதவி

## சர்வதேச நாணய நிதிய தலைவர் தெரிவித்தார்

இலங்கைக்கான கடன் நிவாரண ஒப்பந்தத்தை எட்டுவதற்குசீனாஉதவியதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

மெரிடியன் ஹவுஸ் மற்றும் பொலிட்டிகோ நடத்திய நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

சாம்பியா, கானா மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை அடையசீனாதனதுபணியை விரைவுபடுத்த வேண்டும் எனவும்சீனாவின்புதியஉயர் மட்ட பொருளாதார அதிகாரி லி கியாங்கிடம், ஜோர்ஜீவா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடன்களைக் கையாள்வதற்கு சீனா பல நிறுவனங்களைக் கொண்டுள்ளமையால், தாமதங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சீனா தமது பங்கேற்பை விரைவுபடுத்த வேண்டும் எனக் கோரியுள்ளதாக ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



- நடராசா லோகதயாளன் -

# பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுயதொழிலில் ஈடுபடும் பெண் தலைமைகளின் நிலையும் தினக்கூலிகளாக பணியாற்றும் பெண்களின் வாழ்வாதாரமும் மிக மோசமாகி உள்ளது. இந்தப் பெண்களுக்கு அரசிடமிருந்தோ, தன்னார்வ அமைப்புக்களிடமிருந்தோ போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

இலங்கையில் போர் ஓய்ந்து 13 ஆண்டுகளாகி விட்டது. போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. போருக்குப் பின்னரும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் நெருக்கடிகளை எதிர்கொண்டன.

வீதி விபத்துக்கள், கொடிய நோய், தற்கொலை, குடிநோய் மற்றும் போதைப் பயன்பாடுகளால் ஏற்படும் இறப்புக்கள் என்று பல்வேறுபட்ட காரணங்களாலும் குடும்பத் தலைவர்களை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இலங்கை முழுவதும் உள்ளன. ஆனாலும் போரின் காரணமாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியிலேயே பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

இந்தப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்காக ஓர் தொழிலை மேற்கொள்வதில் அன்றாடம் எதிர்கொள்ளும் சவால்களும் மிக அதிகம். ஆனாலும் சமூகத்தின் ஏனைய தரப்புக்களால் அவர்களின் துன்பங்கள் பெரிதும் கண்டு கொள்ளப்படுவதில்லை.

போரின்போது தனது மூத்த ஆண் பிள்ளையை இழந்து, கணவன் இயற்கை எய்திய நிலையில் ஓர் விபத்தில் ஒரு காலும் முழுமையாக பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் வாழும் அமிர்தலிங்கம் கலாசோதி (56) இன்று தனது குடும்ப வருமானம் கருதி ஓர் சிறுதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். தன்னோடு சேர்த்து மேலும் சிலருக்கு பகுதி நேர வேலை வாய்ப்பினையும் வழங்கி வருகின்றார்.

நான் இந்த தொழிலை 24 ஆண்டுகளாகச் செய்து வருகின்றேன். எனது மூத்த மகன் போர்க் காலத்தில் உயிரிழந்தார். பின்பு கணவர் உயிரிழந்து





10 வருடங்கள் ஆகின்றன. கணவர் இருக்கும்போதே ஓர் விபத்தில் அகப்பட்டு எனது ஓர் கால் இயங்காது. வாழ்வாதாரம் கருதி சிறிது சிறிதாக வடகம் போட ஆரம்பித்தேன். தொடக்கத்தில் குடும்பத்தினரை மட்டும் வைத்து 10 முதல் 15 கிலோ வடகம் தயாரித்து விற்பனை செய்தபோது கேள்வி அதிகரிக்க அதிகரிக்கவே முயற்சியை சற்று விரிவாக்கினேன்.

இந்த தொழிலிற்கு மிக முக்கியமான மூலப்பொருள் வேப்பம் பூ. அதனைப் பெறுவதும் பாதுகாத்து வைப்பதும் மிகப் பெரும் சவால். வேப்பம் பூவை 12 மாதங்களும் பெறமுடியாது வருடத்தில் ஒரு மாதம் மட்டுமே கிடைக்கும். மார்ச் மாத கடைசியில் தொடங்கி ஏப்ரல் மாதம் மட்டுமே இந்தப் பூவை பெறமுடியும்.

இதனைப் பெறுவதற்கு சுமார் 60 முதல் 70 கி.மீ பயணிக்க வேண்டும் சில சமயம் 100 கிலோ மீற்றர் தாண்டியும் செல்ல வேண்டும். அதனால் முச்சக்கர வண்டிகளிலேயே பயணித்து அவற்றை சேகரித்து வரலாம். 2020ஆம் ஆண்டுவரை ஒரு தடவை சென்று பூவை சேகரித்து ஏற்றி வருவதற்கு 2 ஆயிரம் ரூபோ போதுமானதாக காணப்பட்டது இன்று 6 ஆயிரம் ரூபாவும் போதாமல் உள்ளது.

இதேநேரம் வேப்பம்பூ இல்லாத காலத்தில் தொழிலைக் கைவிட்டால் வாழ்வாதாரத்திற்கு வேறு எந்த வருமானமும் கிடையாது. இதனால் தொழில் முறையில்மாற்றத்தைஏற்படுத்தி வாழைப்பூ, பிறண்டை, தாமரைக் கிழங்கு, வெங்காயம் போன்றவற்றிலும் வடகம் தயாரிப்பதோடு பாகற்காய், சுண்டங்காய், காத்தோட்டிக்காய், வாழைக்காய், போன்றவற்றில் வற்றல் தயாரிக்கும் பணியிலும் ஈடுபடுகின்றோம்.

தொடக்கத்தில் மூலப்பொருளைப் பெற்றுவருவதற்கும் உற்பத்தியை நகருக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து செலவு குறைவாக இருந்தது. அத்தோடு இதற்குத் தேவையான உழுந்து, மிளகாய், பெருஞ்சீரகம் என்பனவும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாகப் பல மடங்கு விலை உயர்ந்துவிட்டது. இருப்பினும் அதன் விலைக்கு ஏற்ப உற்பத்தியின் விலையை அதிகரிக்க முடியவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் எனது குடும்பம் மட்டுமன்றி நான்கு அல்லது ஆறு பெண்கள் என்னுடன் பணியாற்றுகின்றனர். காலையில் 8 மணி முதல் 11 மணிவரை பணியாற்றினால் 600 ரூபாவை அவர்களால் பெற முடியும். அது அவர்களின் குடும்ப நெருக்கடியில் ஒருவேளை உணவுப் பசியைப் போக்க உதவுகின்றது.

இந்த பொருளாதார நெருக்கடியிலும் சுகாதாரப் பரிசோதகர்கள் கூறும் அறிவுரைக்கேற்ப அதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும். குறிப்பாக வடகம், வற்றல் என்பன காய வைப்பதனை உயரம் குறைவான இடங்களில் வைப்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள், உயரத்தில் வைத்தாலும் திறந்த வெளியில் வைக்க முடியாது போன்ற சுகாதாரப் பிரச்சினைகளைப் பொருளாதார நெருக்கடியிலும் தீர்க்க வேண்டும். இவற்றைத் தாண்டியே வாழ்வாதாரத்தை ஈட்ட வேண்டும்.

இன்றைய பொருளாதார நெருக்கடியில் சுய முயற்சியில் ஈடுபடும் பெண்களிற்கு இந்தக் கடும் பொருளாதார நெருக்கடி காலத்தில் தொழிலைத் தொடர்ந்து நடத்த அரசு மானிய விலையில் எரிபொருளையோ அல்லது அதற்கான ஊக்குவிப்புக்களையோ குறுகிய காலத்திற்கேனும் வழங்கினால் எம்மைப்போன்ற பெண்கள் மட்டுமன்றி என்போன்ற சிறு முயற்சியில் ஈடுபடும் பெண்கள் தொடர்ந்தும் சொந்த முயற்சியில் ஈடுபட வாய்ப்பு உண்டு. ஏனெனில் கடந்த ஆண்டு ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காலத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களை மட்டும் அரசு நினைத்ததே அன்றி வேறு வருமானம் அற்ற எம்போன்ற சுய முயற்சியாளர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை இதனால் 3 மாதம் தொழிலை இழந்து தவித்தோம் - என்றார்.

இங்கே சுமார் ஓராண்டாக பணியாற்றும் இ.வனிதா, வருமானம் போதாமல் உள்ளபோதும் காலை 8 மணிமுதல் 11 மணிவரை வேலை செய்து அதன் பின்பு வீட்டிற்குச் சென்று தனது சமையல் வேலையைப் பார்ப்பதாகக் கூறுகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் கொடுமையாலும், விபத்துக்கள் மற்றும் இயற்கை அனர்தங்களால் அதிகமாகவும் முதலில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களை நம்பி வாழும் பல ஆயிம் குடும்பங்கள் இன்றும் தொடர் நெருக்கடியின் மத்தியில் தமது குடும்ப வாழ்வாதாரத்திற்காக கையில் கிடைக்கும் தொழில் முயற்சிகளையும் கடினமான வேலைகளையும் ஏற்று அதில் வரும் வருமானத்தில் வாழ்வாதாரத்தை நடாத்துவதோடு சில பெண்கள் இணைந்து தமக்கான வாழ்வாதாரத்தைத் தேடும் அதேநேரம் அயலில் உள்ள தம்மைப்போன்ற பெண்களிற்கு பகுதி நேர வேலை வாய்ப்பினையும் வழங்குகின்றனர். இந்த நிலை இன்று இலங்கை முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றது.

இந்த அவலம் தமிழ், முஸ்லீம், சிங்களம் என்ற பாகுபாடின்றி வியாபித்துள்ளது. வவுனியா நகரின் மத்தியிலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மடுக்கந்தைப் பகுதியில் உள்ள அம்பலாங்கொடல்லகுக்கிராமத்தில் வாழும் 57 வயதான கே.என்.தமயந்தி என்னும் சிங்களப் பெண்மணி: 17 ஆண்டுகளின் முன்பு 40 வயதில் கணவரை இழந்த சமயம் 5 குழந்தைகளுடன் அந்தரித்தேன். அப்போது மூத்த பிள்ளைக்கு வயது 14 ஐந்தாவது பிள்ளைக்கு இரண்டு வயதாகவும் இருந்தது என்கிறார்.

தொடக்கத்தில் கூலி வேலை, தையல் என பல பணிகளில் ஈடுபட்டு குடும்பத்தைக் காப்பாற்றினார் தமயந்ததி. கடும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மூத்த இரு பிள்ளைகளும் திருமண செய்துவிட்டார்கள். 5வது பிள்ளையோ விசேட தேவையுடையவர். அரச உதவி எனில் சமுர்த்தி உதவி மட்டுமே கிடைக்கின்றது. இதனால் வீட்டின் அருகே ஓர் அப்பக் கடையை நடாத்துகின்றார்.

அந்தக் காலமும் கஸ்ரம் இந்தக் காலமும் கஸ்ரம். அதிலும் குறிப்பாக இந்த பொருளாதார நெருக்கடி எம்மை மேலும் வாட்டுகின்றது. ஏனெனில் முன்பு வீட்டின் உணவிற்கு அப்பத்தை வேண்டிச் செல்பவர்களிடமும் பணம் இல்லை. விலை ஏற்றத்தின் முன்பு ஒரு நாளைக்கு 2 ஆயரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபாவிற்கு விற்றால் நாள் ஒன்றிற்கு 700 ரூபா மிச்சம் கிடைக்கும் ஆனால் தற்போது அத்தனை பொருளும் 3 மடங்கு விலை உயர்த்த பின்பும் 2 ஆயிரம் ரூபாவிற்குத்தான் விற்பனை இடம்பெறுவது கிடையாது. இதனால் 400 ரூபாவைக்கூட இலாபமாகப் பெற முடியவில்லை. இயலாத பெண் பிள்ளையின் மருத்துவத்திற்கே அந்தப் பணம் போதாது. அதனால் நான் பட்டினி கிடந்தேனும் பிள்ளையின் மருத்துவத்தைப் பார்க்கின்றேன். எனது வேலையோ உணவு விற்பது ஆனால் நான் உணவை பார்க்கும் நாள்கள் குறைவாகவே உள்ளன என்கிறார்.

வடக்கு மாகாணத்தில் தமது வாழ்வாதாரத்திற்காக இன்னல்களை எதிர்நோக்கும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக குடும்பங்கள் வாழ்கின்றபோதும் மாகாண தொழிற்துறை திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணத்தை தொடர்பு கொண்டு வடக்கில் எத்தனை பெண் சுய முயற்சியாளர்கள் உள்ளனர் என விபரம் கேட்டபோது பதிவு செய்யப்பட்ட பெண் முயற்சியாளர்களாக தற்போதுவரை 3,514 பேர் உள்ளனர் சிலர் தனித்து பதிவின்றியும் இயங்கக்கூடும் என்றார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாதிக்கப்படும் பெண்கள் பொருள் விலையேற்றம் மாறுபட்ட விலை எனக் குற்றம் கூறுவது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டால். எந்த பொருளானாலும் அதற்கு சட்ட வரையறை அல்லது வர்த்தமானி அறிவித்தல் இருந்தால் மட்டுமே வர்த்தகர்களிறகு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் அவ்வாறு இல்லையென்றால் தரம் தொடர்பில் மட்டுமே எம்மால் பரிசோதிக்க முடியும் என்றனர்.





இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களின் நெருக்கடி நிலை ஒரு மாவட்டத்திலோ அல்லது ஓர் இனத்தில் மட்டும் உள்ள பிரச்சினையாக அன்றி நாடு முழுதும் உள்ள பிரச்சினையாகவே உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி தீர்ந்தால் மட்டுமே ஓரளவேனும் நிம்மதியான உணவை பார்க்க முடியும் என ஒதியமலையில் புகையிலைத் தோட்டத்தில் பணியாற்றும் ஒரு பெண்மணி கூறியதோடு புகையிலை ஓர் பணப்பயிர் ஆனாலும் அதனை விளைய வைக்கும் நாம் அந்தப் பணத்தை பார்த்தது கிடையாது என்றார்.

இவ்வாறெல்லாம் இடர் நோக்கும் பெண்களின் முயற்சிக்கு அரச உதவிகள் எந்தவகையில் கிட்டுகின்றது என யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரான அ.சிவபாதசுந்தரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது -

சுய முயற்சியில் ஈடுபடும் பெண்களிற்கு சமுர்திக் குழுக்கள் மூலம் கடன் ஏற்பாடுகள் கிட்டுவதோடு உள்ளூர் சந்தை வாய்ப்புக்களில் வரி விலக்களிப்பு அல்லது வாடகை கட்டணமற்ற சந்தை வாய்ப்புக்கள் அல்லது கண்காட்சிகளில் முன்னுரிமை அளிப்பது மட்டுமன்றி வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் அவரது செயலகம் மூலமாக ஓர் வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். இதே நேரம் சிலர் உற்பத்தி செய்யும் சிறு முயற்சிப் பொருட்களிற்கு சர்வதேச சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனால் ஏற்றுமதியாளர்களுடன் உரையாடி ஓர் நியாயமான பெறுமதியைப் பெற்று வழங்க முடியுமா எனவும் முயல்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** யாழ். கிளிநொச்சி வீதியில் 27 அடி நடேசர் சிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதை விமர்சித்துள்ள சக்திவேல் பாதிரியார் 'வடகிழக்கைச் சிவபூமி ஆக்கப் பார்க்கிறார்கள்' என்று சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** இரத்தம் கொதித்தது! எவ்வளவு துணிவிருந்தால் அவர் அப்படிப் பேசியிருப்பார். மற்றவர் சமயங்களையும் மதிக்கவேண்டும் என்று நடுநிலையோடு இந்து மக்கள் முன்னிலையில் சொல்லிவரும் எங்களைப்போன்றோரைத் தலைகுனிய வைத்திருக்கிறார் அந்த மனிதர். 'பார்த்தீர்களா அவர்களின் மதவெறியை! நீங்கள்தான் எல்லா மதங்களையும் மரியாதை செய்யச் சொல்கிறீர்கள். ஈழ மண்ணின் பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்த மக்களாகிய நாங்களும், இனி இந்துமத வெறியர்களாய் மாறினால்த்தான், இவர்களை அடக்கலாம் போல்த் தெரிகிறது' என்று இந்துமதத்தவர் பலர் எங்களைக் கண்டித்துக் கூறத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் நாங்கள் அவமரியாதைப்பட்டு நிற்கிறோம்.

எம் மண்ணில் பின்னாளில் வந்து ஒட்டிக்கொண்ட சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த ஒரு நபர், இம் மண்ணில் காலா காலமாய் வாழ்ந்து வரும் பெரும்பான்மை மதமாகிய இந்து மதத்தைப்பற்றி, எவ்வளவு துணிவிருந்தால் இப்படிப் பேசியிருக்க முடியும்? இப்படித்தான் சிலகாலத்தின் முன் ஒரு பாதிரியார் தலைமையில் காடையர் குழு ஒன்று சென்று திருக்கேதீஸ்வர அலங்கார வளைவையும் இடித்துத் தள்ளியது.

எங்களது இந்துமதம் இறைவனையே தலைவனாய்க் கொண்டு இயங்கும் சுதந்திரமான ஒரு மதம். கிறிஸ்தவமதம் அப்படிப்பட்டதன்று. அது எங்கள் இந்துமதத்தைப் போல் அல்லாமல் முறைப்படி நிர்வாகமயப்படுத்தப்பட்ட, தனி மனிதர்களைத் தலைவர்களாகக் கொண்ட ஒரு மதமாகும். அம் மதத்தை வழிப்படுத்தவென அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் மதத்தவர்கள் மற்றைய மதங்களை இழிவு செய்து இப்படியெல்லாம் நடக்கிற பொழுது, என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்பதுதான், என் மனதில் எழுகிற முக்கியமான கேள்வி.

எங்கள் மண்ணைச் 'சிவபூமி' என்று எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரேயே திருமூலர் போன்ற ஞானியர்கள் சொல்லிப் போய்விட்டார்கள். இனிமேல்த்தான் இம்மண்ணைச் சிவபூமி என்று நிறுவ வேண்டும் என்ற தேவை எங்களுக்கு இல்லை. முந்தநாள் இங்கு வந்த மதத்தவர்களுக்கு இந்துமத்தை விமர்சிக்கும் உரிமை துளியளவும் இல்லை என்பது என் கருத்து.

வேறொன்றும் வேண்டாம். குறிப்பிட்ட அப்பாதிரியாரின் பெயரைப் பாருங்கள். சக்திவேல் என்னும் அவருடைய பெயரே, அவர் எங்கிருந்து அங்கு சென்றிருப்பார் என்பதை நமக்கு உணர்த்துகின்றது அல்லவா? அப்படித் தங்களை விற்று மதம் மாறியவர்கள்தான் இப்படி அதிகம் பேசத் தலைப்படுகிறார்கள். 'வேசியர்கள்தான் கற்பைப்பற்றி அதிகம் பேசுவார்கள்' என்று சொல்லப்படும் தொடரின் உண்மையைத் தான் சக்திவேல் நிறுவி நிற்கிறார். பாதிரியார் சக்திவேல் அவர்கள், தன்னுடைய பாட்டன், முப்பாட்டன் ஆகியோரது பெயர்களை ஒருதரம் சொல்லட்டும். அப்போது எங்கள் இந்து மதத்தின் தொன்மை தானாகத் தெரியவரும்.

வடக்கிலும், கிழக்கிலும் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்துமக்களின் பெருந்தன்மையைச் சிறுபான்மைச் சமயங்கள் சீண்டிப்பார்க்க நினைப்பது பெருந்தவறு! நம்மவரின் பண்பாட்டைப் பலவீனமாக அவர்கள் கருதுவார்களேயானால், அதனால் விளையப்போகும் விளைவு கடுமையானதாக இருக்கும் என்பதை மட்டும் இவ்விடத்தில் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு * என்னத்தைச் சொல்ல 'சிவசிவா இயேசுவை மறப்பேனா?' என்ற கதையாகத்தான் இதுவும் இருக்கிறது.**

**2. உரலார் கேள்வி:-** பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை அவர்கள், ஏப்ரல் 14 இல் தற்போது ஆட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களின் ஊழல் பட்டியலையும், அவர்களின் சொத்து விவரங்களையும் வெளியிடப் போகிறாராமே. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** முதலில் அப்பட்டியலை அவர் வெளியிடட்டும். அதன் பிறகு அதுபற்றி நாம் பேசலாம்.

**சல்லடையாரின் சலிப்பு * வெருட்டித் தள்ளுகிறார் மனிதர்.**

**3. உரலார் கேள்வி:-** இந்துசமய வழிபாட்டு மரபை, உங்கள் இஷ்டத்திற்கு நீங்கள் மீறி வருவதாய்ச் சிலர் உங்களைக் குறை சொல்கிறார்களே.

**உலக்கையார் பதில்:-** அக் காலத்தில் ஆலயத்திற்குள் விடத் தகுதியற்றவர்கள் எனக் கருதப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களான திருநீலகண்ட யாழ்ப்பாணரையும், அவரது னைவியாரையும், திருஞானசம்பந்தர் அந்தண வீட்டில் நடைபெற்ற யாகத்தின்போது உள்ளே அழைத்து தனக்கு அருகில் அமர்த்தியபோது யாக நெருப்பு ஜுவாலித்து எரியத் தொடங்கியது என எழுதி, மரபுமீறலை அங்கீகரித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

சிவகோச்சாரியார் என்கின்ற உண்மைப் பிராமணருடைய பூசைக்கும், கண்ணப்பர் என்கின்ற வேடனுடைய மரபுமீறிய பூசைக்கும்; இடையில் போட்டி உண்டாக்கிக்காட்டி, நிறைவில் இறைவன் கண்ணப்பருடைய பூசையையே அங்கீகரித்து, அதனை வந்து காணும்படி சிவகோச்சாரியாருக்கு உரைத்ததாய் எழுதி, மரபுமீறலை அங்கீகரித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

லிங்கத்திற்கு கல்லால் எறிந்து பூசை செய்த சாக்கிய நாயனாரை இறைவன் அங்கீகரித்தான் என எழுதி, மரபுமீறலை அங்கீகரித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

சிவபெருமானைத் தன் காதலியிடம் தூது செல்ல வைத்த சுந்தரரை சிவபெருமான் ஏற்றுக் கொண்டாதாக எழுதி, மரபுமீறலை அங்கீகரித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

இப்படி எத்தனையோ சொல்லலாம். என்னைத் திட்டுகிறவர்கள், இந்த மரபுமீறல்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்? மேற் சொன்ன வரலாறுகளை மரபுமீறிப் புதுமையாய் அமைத்துக் காட்டிய சேக்கிழாரை இவர்கள் கண்டிக்கத் துணிவார்களா? அப்படி இருந்தால் அவர்கள் என்னையும் கண்டிக்கட்டும்.

நம் இந்துமதம் கட்டுப்பாட்டை விதிக்கவும் செய்திருக்கிறது. அதனை உடைக்கவும் அனுமதித்திருக்கிறது. அதுதான் இந்து சமயத்தின் தனிச்சிறப்பு. அச்சிறப்பு அறியாதவர்களின் புலம்பல்கள் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * அப்படிப் போடுடா தம்பி அரிவாள'**

**4. உரலார் கேள்வி:-** வெடுக்குநாறியில் உடைத்தெறியப்பட்ட விக்கிரகங்களுக்குப் பதிலாகப் பிரதிஷ்டை செய்யவென ஏழு லட்சம் ரூபா பெறுமதியான சிலைகளை, ஆறு.திருமுருகன் அவர்கள் வழங்கியிருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** பாராட்டத் தகுந்த விடயம்;தான். ஆனால் ஒன்று! மீண்டும் அச்சிலைகள் உடைபடாமல் இருப்பதனை முதலில் உறுதி செய்யவேண்டும். அதைச் செய்துவிட்டுத்தான் புதிய சிலைகளை அங்கு பிரதிஷ்டை செய்யவேண்டும். அதற்கான காரியங்களை நம் தலைவர்களைக் கொண்டு செய்வித்தல் அவசியம்.

ஜனாதிபதியின் பணிப்பபின் பெயரில், அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா அவர்களும், ஜீவன் தொண்டமான் அவர்களும் நேரில் சென்று நிலமையை ஆராய்ந்திருக்கிறார்கள். அங்கு ஊடகவியலாளர்களுடன் பேசிய டக்ளஸ் அவர்கள், 'இந்த விடயத்தில் அனைவரும் பொறுமை காக்க வேண்டும்' எனச் சொன்னதிலிருந்து, இப்பிரச்சினையில் இருக்கக்கூடிய சிக்கலின் ஆழத்தை நாம் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் வெறுமனே சிலைக்குச் சிலை வைப்பதால் மட்டும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. நம் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து (?) நமது மூக்கு நுனியில் கைவைக்கப் பார்க்கும் இந்தப் பிரச்சினை பற்றி ஜனாதிபதியுடன் பேசி, உடனடியாக ஓர் நல்ல முடிவைக் காண வேண்டும். அதற்குப் பிறகுதான் புதிய சிலைகள் வைக்கும் முயற்சி பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணாவிட்டால் இப்போது மூக்கைத் தொட்டவர்கள் பின்னாளில் முழுவதையும் தொட முனைவார்கள்.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் முன்மொழிவதை நான் வழி மொழிகிறேனுங்கோ!**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 24 வெள்ளிக்கிழமை 07.04.2023 கதிர் 21


## கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு


### தீர்வு கிடைத்தது என்கிறது தேசிய நீர் வழங்கல் சபை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த பணிப்புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கை இன்று கைவிடப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பணியாளர்கள் கடந்த நான்கு தினங்களாக பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர். சுகயீனவிடுமுறை கொடுப்பனவிலுள்ள பிரச்சினைகளுக்குத் 2

## புதிய பயங்கரவாதச் சட்டம் திரும்ப பெறப்படவேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




**இலங்கை அரசின் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது அடிப்படை மனித உரிமைகளை முறையாக மீறுவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றது மனித உரிமை கண்காணிப்பகம் இன்று குற்றம் சுமத்தியுள்ளது.**

எனவே, இந்த யோசனையை அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தரத்தை நிலைநிறுத்துகின்றது என்பதை ஆலோசனைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான விமர்சனங்களைத் தொடர்ந்து, அதனை மாற்றியமைக்க இலங்கை அரசு உறுதியளித்தது.

எனினும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, சொத்து சேதம், திருட்டு அல்லது கொள்ளை போன்ற குற்றங்களை உள்ளடக்கி பயங்கரவாதத்தின் வரையறையை இந்த யோசனை விரிவுபடுத்துகின்றது.

பொதுக்கூட்டங்கள் மற்றும் பேச்சு சுதந்திரத்துக்கான உரிமைகளையும் இது கட்டுப்படுத்துகின்றது.

இந்த நிலையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், அமைதியான விமர்சகர்களை மௌனமாக்குவதற்கும் சிறுபான்மையினரைக் குறிவைப்பதற்கும் இலங்கை அரசு கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கும் – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 மார்ச் 22 வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு யோசனை, 1979 இல் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து பரவலான சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையான தடுப்புக் காவல்களுக்கு வழிவகுத்த இழிவான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றும் நோக்கம்கொண்டது.

இந்தப் புதிய யோசனையில் சில முன்னேற்றங்களும் உள்ளன.

இலங்கை செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, வெளிநாட்டு அரசுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி, உரிமைகளை மதிக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பலமுறை உறுதியளித்துள்ளன.

அந்த வகையில், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2018 இல் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பயங்கரவாத எதிர்ப்பு யோசனை சர்வதேச தரநிலைகள் எதையும் முழுமையாக பூர்த்தி செய்யவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சர் கையொப்பமிட்ட உத்தரவின் பேரில், அதிகாரிகள், சந்தேகத்துக்குரிய ஒருவரை, ஓராண்டு வரை காவலில் வைக்க முடியும்.

முன்மொழியப்பட்ட புதிய யோசனை, பொலிஸ் துணை ஆய்வாளர்களுக்குத் தடுப்புக் காவல் உத்தரவுகளை வழங்க அதிகாரம் அளிக்கின்றது. இது துஷ்பிரயோக அபாயத்தை அதிகரிக்கின்றது.

முன்மொழியப்பட்ட புதிய யோசனை, 'நியாயமான காரணங்கள்' இருப்பதாக அவர்கள் நம்பினால், யாரையும் தடுக்க, கேள்வி கேட்க, தேட மற்றும் கைது செய்ய அல்லது எந்த ஆவணம் அல்லது பொருளையும் நீதிமன்ற உத்தரவில்லாமல் கைப்பற்ற பொலிஸ் மற்றும் இராணுவத்துக்கு விரிவான அதிகாரங்களை வழங்குகின்றது.

1976 ஆம் ஆண்டு முதல் இலங்கை மரணதண்டனைக்கு தடை விதித்தாலும், கொலை என்ற பயங்கரவாதக் குற்றத்துக்கு மரண தண்டனையை இந்த யோசனை அனுமதிக்கின்றது.

இந்த யோசனையின்படி, பொலிஸாரிடம் அளிக்கப்படும் வாக்குமூலங்கள் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, சந்தேகப்படும்படியான பெண்களை பெண் அதிகாரிகளால் தேட வேண்டும் என்பன உள்ளிட்ட சில புதிய முறையான பாதுகாப்புகள் உள்ளன.

கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை அறிவிப்பதற்கும், கைதி புரிந்துகொள்ளும் மொழியில் ஆவணங்களின் மொழிபெயர்ப்புகளுக்கான அணுகலை வழங்குவதற்கும், தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை 14 நாட்களுக்கு ஒருமுறை நீதிவானிடம் முன்னிலைப்படுத்துவதற்கும் புதிய நடைமுறைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சட்டமூலத்தின் கீழ் முன்மொழியப்பட்ட சுயாதீனமான இரண்டு நிறுவனங்கள், சட்டத்தால் சுயாதீனமாக இருக்காது. –என்றார். (02)

## வெதுப்பக பொருள்களின் விலை குறையும்



(எஸ்.நிதர்ன்)

யாழ் மாவட்டத்தில் பாணின் விலையை தற்போது 10 ரூபாவினால் குறைத்தது போன்று ஏனைய வெதுப்பகப் பொருட்களின் விலையையும் விரைவில் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஒரு சில பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலைமையில் அதன் விலைகளை குறைப்பது தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். ஆனாலும் போதுமான அளவில் உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படாத போதும் இலாபத்திலிருந்தாவது பாணின் விலையை முதற்கட்டமாக குறைப்பதற்கு சங்கமாக தீர்மானமொன்றை எடுத்துள்ளோம்.

எமது மக்களுக்கு அங்கீகரிக்கப்படாத தேசிய உணவாக பாண் தான் இருக்கின்றது. ஆகவே மக்களுக்காகவே இதன் விலையை குறைத்து இன்று முதல் 160 ரூபாவிற்கு பாணை வழங்குகிறோம் என்றார்.

இலாபத்தில் இருந்து தான் தற்போது பத்து 2

## பொலிஸ் மா அதிபரின் பதவி நீடிப்பு வர்த்தமானி வெளியீடு



பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 26 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (02)

## யாழ். சிறையில் நாளை நூலகம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென அமைக்கப்பட்ட தனியான நூலகம் நாளை சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

பல்கலைக் கழகத்தின் சமூகப் பொறுப்பாண்மையின் ஓர் அம்சமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் தனது சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான நூலகமொன்றை ஒழுங்கமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டது.

அந்த முயற்சியின் முதல் படியாக ஏறத்தாழ 2,500 புத்தகங்களை கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் தண்டனைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களின் கல்வி, புனர்வாழ்வு மற்றும் தண்டனைக் காலத்தைப் பயனுள்ள முறையில் செலவிடுதல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் வலியுறுத்துகின்றது.

இச் சூழலமைவு சிறைச்சாலையின் சட்ட திட்டங்களுக்குட்பட்ட சிறைச்சாலை நூலகமொன்றின் உருவாக்கத்திற்கு வழிசமைக்கின்றது.

இலங்கையில் 2

## ரயில் விபத்தில் 17 பேர் காயம்!

திருகோணமலை, கந்தளாய் –அக்போபுர ரயில் நிலையத்துக்கு அருகில், ரயில் ஒன்று தடம்புரண்டதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த 17 பேரும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரயில் தடம்புரண்டதில் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் 2 பேரும், பயணிகள் 15 பேரும் காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

## ஊஞ்சல் கயிறு இறுகி சிறுவன் பரிதாபச் சாவு

*மரக்கிளையில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சல் கயிறு, கழுத்தில் இறுகியதில் 14 வயதான சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் கிரிஉல்ல போபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*சம்பவம் இடம்பெற்ற போது உயிரிழந்த சிறுவனின் தாயும் இளம் சகோதரரும் பூப்பறிப்பதற்காக வீட்டிலிருந்து வெளியேறி சென்றிருந்தனர் என்றும், மூத்த சகோதரி குளியல் அறையில் இருந்துள்ளார் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.*

*தாய் வீட்டுக்கு வரும்போது மகன், ஊஞ்சல் கயிற்றில் இறுகியிருப்பதைக் கண்டு, கயிற்றை அறுத்துள்ள தாய், மகனை தம்பதெனிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.*

*எனினும், குறித்த சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (02)*

## இளம் ஆசிரியை வெட்டிக்கொலை

கண்டி – பேராதனையில் இளம் ஆசிரியை ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முருதலாவ பகுதியைச் சேர்ந்த 25 வயதான பெண்ணே இந்தக் கொடூர சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராதனை – கொப்பேகடுவ பகுதியில் வைத்து குறித்த ஆசிரியர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாலர் பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்குபற்றச் சென்றபோதே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் இலுக்தென்ன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

## ரணில் இல்லையேல் மக்கள் பட்டினியால் செத்திருப்பர்

### அதனால் அவரை ஆதரிக்க வேண்டும் என்கிறார் பந்துல



ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யாவிட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ச விலகியவுடன் அன்று பிரதமர் பதவிலிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானார். அவர் இன்று துணிச்சலுடன் சவால்களை எதிர்கொண்டு வெற்றிநடை போடுகின்றார். அவரை அன்று நாம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யாவிட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பார்கள்.

ரணிலின் ஆட்சியால் நாடு முன்னோக்கிய பாதையில் செல்கின்றது. குறுகிய காலத்தில் நாம் மீண்டெழுந்து வருகின்றோம். சர்வதேசம் எமது நாட்டுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது.

இலங்கை தொடர்ந்தும் சர்வதேசத்தை நம்பியிருக்கக் கூடாது. சர்வதேசத்திடம் வாங்கிய கடன்களை மீளச் செலுத்திவிட்டு சொந்தக் காலில் இலங்கை பயணிக்க வேண்டும் என்பதே ரணிலின் விருப்பம். அவருக்கு அனைவரும் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் –என்றார். (02)

### குளிரூட்டி அறையை விடுத்து

## மக்கள் படும் துன்பத்தை நேரில் வந்து பாருங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்



நாட்டின் நிலைமை நன்றாக உள்ளது என்று தலைநகர் குருந்துவத்தை குளிரூட்டி அறைகளில் இருந்து கொண்டு கூறும் நபர்களிடம் நாட்டின் உண்மை நிலையை அறிய குளிரூட்டி அறையை விட்டு வெளியேறி கிராமம் தோறும் மூலை முடுக்குகளுக்குச் சென்று பார்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சில பாடசாலை களைப் பார்த்தால் இடிந்துவிழும் கட்டடங்களைத் தான் காணக்கிடைத்தாலும், இவ்வாறான கஷ்டப் பாடசாலை களுக்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் சர்வதேச விமான நிலையங்கள்கூட நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பணத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கி நாட்டின் கல்வியை அபிவிருத்தி செய்திருந்தால் எமது நாடு இன்று உலகில் குறிப்பிடத்தக்க இடத்தில் இருக்கும் நாடாக முன்னேறியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் 27 ஆவது கட்டமாக ஹம்பாந்தோட்டை உடமத்தல கனிஷ்ட வித்தியாலயத்தில் இன்று (07) நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார். (02)

## யாழ்.சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச் சாலை நூலகங்கள் மட்டுப் படுத்தப்பட்ட வசதிகளுடனேயே இயங்குகின்றன. அவை பெரும்பாலும் நூலக நியமங்களுக்கேற்ப ஒழுங்கமைக்கப்படுவதில்லை. நன்கொடை மூலம்கிடைக்கும்நூல்கள்மற்றும்தளபாடங்களை கொண்டவையாகவே அவை காணப்படுகின்றன. இந்நிலையில் இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றில் முதன் முதலாக ஒழுங்கமைக்கப்பட்ட நூலகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னை ஈடு படுத்திக் கொண்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந் தம் சிவநேசன் குடும்பம், ஐ.பி.சி தமிழ் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக நூலகத் தினர் இந்தச் சிறைச்சாலை நூலகத்தை உருவாக்கியுள்ளனர். இந்நூலகம்தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது.

## வெதுப்பக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை குறைத்துள்ளோம். சிலருக்கு இது பொருத்தம் இல்லாமலும் விருப்பம் இல்லாமலும் இருக்கலாம்.

அதனால் எங்கள் மீது விமர்சனங்கள் வரலாம். ஆனாலும் எமது மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதால் நாங்கள் விட்டுகொடுப்புடன் பெருந்தன்மையாக நடக்கிறோம்.

பாண் விலையை தற்போது குறைத்திருக்கின்ற நிலைமையில் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டால் பாடலைப் போன்று ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் நிலைகளையும் மக்களுக்காக நாங்கள் குறைப்பதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கைவிடப்பட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வொன்றை பெற்றுத்தருமாறு கோரியே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தநிலையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச் சபை பணியாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கப்பெற்றதால் இன்று பணிப்புறக்கணிப் பைக் கைவிட்டு சேவைக்கு திரும்பியதாக தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபையின் ஒருங்கிணைப்பாளர் உபாலி ரத்நாயக்க ஊடகங்க ளிடம் தெரிவித்தார். (02)

# விளாவட்டவான் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி









(பழுவூரான்)

மட்டக்களப்பு - மன்முனை மேற்கு - விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வியாழக்கிழமை விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் நவரெத்தினம் நவேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டு நிகழ்வின் தொடக்கத்தில் அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட பின்னர், ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாணவர் அணிவகுப்பு, ஒலிம்பிக் தீபம் ஏற்றல், சத்தியப்பிரமாணம், அணிநடை, சிறுவர் மெய்வன்மை விளையாட்டுக்கள், பழையமாணவர்கள்மற்றும்பெற்றோருக்கான விளையாட்டுக்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விளையாட்டுக்கள், உடற்பயிற்சி கண்காட்சி, வினோத உடைப் போட்டி மற்றும் அஞ்சலோட்டம் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

2023 ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப்போட்டியில் வள்ளுவர் இல்லம் வெற்றிபெற்று சம்பியனாக மகுடம்சூட, கம்பர் இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அத்தோடு இல்ல அலங்கரிப்பிலும் வள்ளுவர் இல்லம் வெற்றிபெற்றது.

வள்ளுவர் இல்ல மாணவன் தி.லக்சன் இந்த வருடந்துக்கான சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டார்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்ட அதே வேளை போட்டிகளில் வெற்றிபெற்ற பழைய மாணவர்கள், பொற்றோர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளுக்கு ஞாபகார்த்த சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

விளையாட்டு நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எஸ்.மகேந்திரன், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக கணக்காளர் ஆர்.சிவகுமார், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், முன்னாள் அதிபர்கள் மற்றும் விளாவட்டவான் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

# தாத்தா, பாட்டி கொலை பேரன் பொலிஸால் கைது

பல்லகெடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவநிவச நாவலகம பகுதியில் 80 வயதுடைய தாத்தாவையும் 70 வயதுடைய பாட்டியையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்தார் என்று கருதப்படும் பேரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்ல, கீரியகொல்ல மடுகஸ்தலாவ பகுதியில் உள்ள வனப்பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

கொலையாளி கீரியகொல்ல மடுகஸ் தலாவ வனப்பகுதியில் தலைமறைவாகி இருக்கின்றார் என்று பல்லகெடுவ பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து பல்லகெடுவ பொலிஸாரும் பண்டாரவளை பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து குறித்த வனப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்ட போது குறித்த சந்தேகநபர் வனப்பகுதியினூடாக வெல்லவாய பிரதேசத்துக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை பண்டாரவளை நீதிவானிடம் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பல்லகெடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)





# மாமனிதருக்கு அஞ்சலி

-எஸ்.நிதர்ன்-

திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் வ. விக்னேஸ்வரனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்றது.

கொக்குவிலில் உள்ள தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் மாமனிதர் விக்கினேஸ்வரனின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டு மாமனிதரின் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி காலையில் வங்கிக்கு கடமைக்காக சென்று கொண்டிருந்த போது வங்கிநுழைவாயிலில் வைத்து ஆயுததாரிகளால் விக்கினேஸ்வரன் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பில் தேவாலயம் ஒன்றில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில் அவரது நாடாளுமன்ற இடத்திற்கு, மாமனிதர் விக்னேஸ்வரனின் பெயர் அன்றைய தினம் வெளியிடப்பட இருந்த நிலையிலையே இவரும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

# ரணிலைச் சந்தித்த தென்கொரிய தூதர்



தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்த பின்னர் தாய்நாடு திரும்பும், இலங்கைக்கான தென்கொரிய தூதுவர், ஜொன்ங் வூன்ஜின், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

தான் நாடு திரும்புவதை ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்ததுடன், சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜொன்ங்வூன்ஜின், தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் எதிர்கால பணிகள் வெற்றியடைய வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜயவர்தனவும் கலந்துகொண்டார்.

ஜொன்ங் வூன்ஜின் 2020 ஜூலை 2 ஆம் திகதி முதல் இலங்கைக்கான தென்கொரியத் தூதுவராகப் பணியாற்றி வந்தார். (02)

# மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் பாரம்பரிய உணவு விற்பனைக்கூடம்

(பழுவூரான்)

பெண் தலைமைதாங்கும் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாரம்பரிய உணவு விற்பனைக்கூடம் மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தேசிய தொழில் முயற்சி அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவகுமாரின் ஒழுங்கு படுத்தலின் கீழ் இடம் பெற்ற இந் நிகழ்வில் அதிகளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கலந்து கொண்டன.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன், நஞ்சற்ற உணவு வகைகளையும் எமது பாரம்பரிய உணவு வகைகளையும் காட்சி படுத்தப்பட்டு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது எமது பாரம்பரிய உணவுகளான தானியவகைகள், கீரைகள், மற்றும் தினை, உளுந்து, பயற்றை, குரக்கன், சோளன் போன்றவற்றில் செய்யப்பட்ட உணவுகள் மற்றும், மா வகைகள் விற்பனை செய்யப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண் தலைமைதாங்கும் குடும்பத்தினரின் சுயதொழிலினை மேம்படுத்துவத்துவதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதனை நோக்கமாக கொண்டு இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









# உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசனம்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில்குறிப்பிடப் பட்டுள்ள பயங்கரவாதம் குறித்த வரையறையை அரசாங்கம்மறுபரிசீலனைசெய்ய வேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் தாம் பயங்கரவாதிகளாக அடையாளப் படுத்தப்படுவோம் என்ற அச்சத்தில், பொது நலன் சார்ந்த விடயங்களில் பேசவோ அல்லது தங்கள் கருத்தை வெளிப்படுத்தவோ பின்வாங்கக் கூடும். இது ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பிரிவு 3 (1) இல் பயங்கரவாதத்தின் வரையறை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை மறுபரிசீலனை செய்வதோடு, குறித்த வரையறைக்குள் வரும் செயல்களை தெளிவுபடுத்துவதற்கும் குறிப்பிட்ட திருத்தங்களை பரிந்துரைக்க வேண்டும்.

பயங்கரவாதம் குறித்த வரையறை நீண்ட காலமாக ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக உள்ளது. சட்ட ரீதியான கருத்து வேறுபாடுகள் மற்றும் உண்மையான பயங்கரவாதச் செயல்களை வேறுபடுத்திப் பார்ப்பதை இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறை கடினமாக்குகிறது.

அத்தோடு இந்த சட்ட மூலம் அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமையை மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பறிக்க முடியாத உரிமையான பேச்சுரிமையையும் மீறுவதாக அமைகின்றது.

பயங்கரவாதம் என்பது ஒரு வன்முறைச் செயலாகும், இது வற்புறுத்துவதற்கும், பயமுறுத்துவதற்கும் அல்லது பயத்தை ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இது ஒரு கருத்தியல் நோக்கத்தை அடைவதற்கான ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது.

இருப்பினும், குறித்த சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையின் பரந்த நோக்கம் அதன் பயன்பாட்டுக்கு வழிவகுக்கும்.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படை உரிமைகளில் தலையிடும் வழிகள், பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளது.

போராட்டம் அல்லது பேரணியில் பங்கேற்கும் எவரும், அமைதியாகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், அதுவும் ஒரு பயங்கரவாதச் செயலாகக் கருதப்படலாம். இது மக்களின் எதிர்ப்பைக் குரல் கொடுக்கும் உரிமையை நசுக்க வழி வகுக்கும்.

பயங்கரவாதி என்று அடையாளப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தில், பொது நலன் சார்ந்த வியங்களில் பேசவோ அல்லது தங் கள் கருத்தை வெளிப்படுத்தவோ பலர் பின்வாங்கக் கூடும். இது ஓர் அச்சமான சூழலை ஏற்படுத்தும். இது ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல என மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையின் ஊடாக வலியுறுத்தியுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனநாயகத்திற்கு எதிரானதல்ல

## எஸ்.எம்.சந்திரசேன விளக்கம்



நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து–வதற்காகவே பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் உருவாக்கப்படவுள்ளது. வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள சட்டமூலம் பயங்கரவாதத்துக்கு எதிரானதே தவிர, ஜனநாயகத்துக்குஎதிரானதல்ல என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன.

மதத் தலைவர்கள் கூட அரசியல்வாதிகளை போல் கருத்துரைப்பது கவலைக்குரியது. ஜனநாயக உரிமைகளை ஒருதரப்பினர் தவறாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் உருவாக்கப்படவுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தடைச்சட்டமூலம் பயங்கரவாதத்திற்கு எதிரானதே தவிர ஜனநாயகத்திற்கும், அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானதல்ல. குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தொழிற்சங்கத்தினர் பொருளாதாரத்தை பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

தங்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக மக்களையும், அரசாங்கத்தையும் இவர்கள் நெருக்கடிக் குள்ளாக்குகிறார்கள்.

நாடு என்ற ரீதியில் முன்னேற் றமடைய வேண்டுமாயின் ஒழுக்கத்தை அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும். அதற்கு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்தால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான போராட்டங்களுக்கு மக்களே கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமூலத்தை சட்டமாக்க மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள். –என்றார்.

# புதிய பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் ரணில் விருப்பப்படும் நாடு உருவாகாது

## ராஜித சேனாரத்ன 'அட்வைஸ்'



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம், ஏற்கனவே காணப்பட்ட பயங்கரவாதத் தடை சட்டத்தை விட மோசமானதல்ல.

எவ்வாறிருப்பினும் புதிய சட்ட மூலத்தில் காணப்படும் கடுமையான ஏற்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் வன்முறைகள், இனக்கலவரங்கள் ஏற்பட்ட போது அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தியே அப்போதைய தலைவர்கள் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அன்று பயங்கரவாதத் தடைசட்டம் காணப்படவில்லை. அத்தோடு இந்த சட்டம் நடைமுறையில் இருந்த போதிலும், வடக்கில் 30 ஆண்டுகள் உள்நாட்டு யுத்தம் இடம் பெற்றது.

பயங்கரவாத எதிர்பு சட்டத்தைக் கொண்டுள்ள நாடுகள் சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக அதனை நடைமுறைப் படுத்துகின்றன.

ஆனால் இலங்கைக்கு அவ்வாறு சர்வதேச அச்சுறுத்தல்கள் எவையும் இல்லை. புதிய பயங்கரவாதத் தடைசட்டம் முன்னர் காணப்பட்ட பயங்கரவாதத் தடை சட்டத்தை விட மோசமானதல்ல என்ற போதிலும், அதுவும் சிறந்ததல்ல என்பதே எனது நிலைப்பாடாகும்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை விட ஓரளவு இலகு–வான ஏற்பாடுகள் புதிய சட்டத்தில் காணப்படுகின்றன. எனினும் இதில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள கடுமையான ஏற்பாடுகளை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

இவை நீக்கப்படாவிட்டால் ஜனாதிபதி எதிர்பார்ப்பதைப் போன்று நவீன இலங்கையை உருவாக்க முடியாது. –என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நியாயப்படுத்திய நீதி அமைச்சர்



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் கருத்துக்களைக் கேட்டறியும் நோக்கில் சிவில் சமூகப்பிரதிநிதிகளைச் சந்தித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக 'உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்' போன்ற கடுமையான சட்டமொன்று அமுலில் இருக்கவேண்டியதன் அவசியம் குறித்து அவர்களுடன் வலுவாக வாதிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் உள்ளடக்கம் பல்வேறு எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்திருக்கின்ற பின்னணியில், அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தாமதிக்கப்போவதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்நிலையில் விய–ாழக்கிழமை கொழும்பிலுள்ள நீதியமைச்சில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில் அந்த இயக்கத்தின் சார்பில் ரொஹான் சமரஜீவவும், ஏனைய சிவில் சமூகப் பிரதிநிதிகளான கலாநிதி ஜெஹான் பெரேரா, ஜாவித் யூஸுப், நிமல்கா பெர்னாண்டோ உள்ளிட்ட மேலும் சிலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலத்தின் குறைபாடுகள் தொடர்பில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷவிடம் சுட்டிக் காட்டிய சிவில் சமூகப்பிரதிநிதிகள், அந்தச் சட்டத்தில் வலுவான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த விஜயதாஸ ராஜபக்ஷ, உலகநாடுகள் பலவற்றிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான பல்வேறு வலுவான சட்டங்கள் அமுலில் இருக்கின்றன எனவும், அதேபோன்று இலங்கையில் பயங்கரவாத செயற்பாடு களை இல்லாதொழிப்பதற்காகவே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டி ருப்பதாகவும் வலுவாக வாதிட்டுள்ளார்.

இருப்பினும் தற்போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் கடும் எதிர்ப்பையும் விமர்சனங்களையும் வெளிப்படுத்திவரும் நிலையில், அந்த அனைத்துத் தரப்பினரையும் சந்தித்து, இந்தச் சட்டமூலம் தொடர்பில் அவர்களின் ஆலோசனைகளைப் பெறவிருப்பதாகவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்தோடு இதுபற்றி சிவில் சமூகப்பிரதிநிதிகளின் நிலைப்பாடு மற்றும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறும் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அதற்கு உடன்பட்ட சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல் மற்றும் மிகச்சாதாரணமான குற்றங்களை பயங்கரவாத செயற்பாட்டின்கீழ் உள்ளடக்க வேண்டாமென அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வலியுறுத்திக்கேட்டுக்கொண்டனர்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்: 100 கோடி டொலரை இழக்கநேரிடும்

## சுற்றுச்சூழல் நீதிக்கான மையம்

எம்.வி. எக்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து தொடர்பான சட்ட நடவடிக்கையை அடுத்த 45 நாள்களுக்குள் ஆரம்பிக்கத் தவறினால், இலங்கை சுமார் 100 கோடி டொலர் இழப்பீட்டுத் தொகையை இழக்க நேரிடும் என சுற்றுச் சூழல் நீதிக்கான மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை யொன்றிலேயே சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையின் சட்டத் துக்கமைய சம்பவம் இடம் பெற்று இரண்டு ஆண்டுகளுக்குள் அதாவது எதிர்வரும் 29 ஆம் திகதிக்குள் இழப்பீடு கோரப்படவேண்டும்.

தற்போதைய நிலைவரத் துக்கமைய கடல் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இலங்கைக்கு ஏற்படும் பல்வேறு பாதிப்புகளுக்கு இழப்பீடாக 6.4 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது அமைச்சரவை, நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் என்பன இணைந்து, சிங்கப்பூரில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முடிவை எடுத்துள்ளன. இது நிச்சயமற்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

சிங்கப்பூர் அதிகாரிகள் தேவையான நடைமுறைகளுக்கு ஏற்கனவே தயாராகி வருகின்றனர் எனவும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் நிலைமையை அறிந்திருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது. இந்த முயற்சிக்கான செலவிற்காக இலங்கை 45 லட்சம் டொலர்களைக் கடனா கப் பெற்றுள்ளதாகவும் தெரிய–வந்துள்ளது.

எவ்வாறாயினும், தேவை–யான காலத்திற்கு முன்னர் இழப்பீடு கோரிக் கையை தாக்கல் செய்யத் தவறியமையால் 10 பில்லியன் டொலர் இழப்பீட்டுத் தொகையை இலங்கை இழக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எல்லை நிர்ணய அறிக்கை தயார் கையளிக்க நாள் கேட்டு காத்திருப்பு



புதிய எல்லை நிர்ணய அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. கையளிப்பதற்கான திகதியை பிரதமரிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எல்லை நிர்ணயம் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் தொகையை அரைவாசியாகக் குறைக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தயார் நிலையில் உள்ளது.

இந்த அறிக்கை விரைவில் பிரதமரும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கான திகதியொன்றை ஒதுக்கித் தருமாறு தான் பிரதமரிடம் கேட்டிருக்கிறேன்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய உறுப்பினர் தொகை சுமார் 8500 இலிருந்து 4714 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எண்ணிக்கையைக் குறைக்கும் வகையிலே எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உறுப்பினர் தொகையில் தேர்தல்கள் ஆணைக்குழு மாற்றங்களை செய்ய முடியும்.

அத்துடன் 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கல்முனை மாநகரசபை தொடர்பான வழக்கொன்று நீதிமன்றில் விசாரணையின் கீழ் உள்ளதால் அச்சபைக்கான எல்லை நிர்ணயம் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணய அறிக்கை தனித்தனியாக மாகாண ரீதியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மொத்தம் 27 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் மீளாய்வுக் குழுவொன்றினை நியமித்து அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரமுண்டு. -என்றார்.



# இந்தியாவுடன் பொருளாதார ஒருங்கிணைப்பு முக்கியம்

## பொருளாதார ஆலோசனைக் குழுவில் மிலிந்த வலியுறுத்து

இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட பொருளாதார ஆலோசனைக் குழுவில் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் பொருளாதார ஆலோசனைக்குழுவில் உரையாற்றியபோதே உயர்ஸ்தானிகர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்திய - இலங்கை உறவுகள், குறிப்பாக, இருதரப்பு பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான முக்கிய பகுதிகள் தொடர்பாக இதன்போது அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை எதிர்கொண்ட கடும்நெருக்கடிகளின்போது, பொருளாதாரமீட்சிக்காக இந்தியா வழங்கிய பங்களிப்பையும் அவர் இதன்போது நினைவுகூர்ந்தார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் முக்கியத்து-வத்தை வலியுறுத்திய அவர், கொள்கை வழிகாட்டுதலின் ஊடாக அந்தச் செயற்பாட்டுக்கு உதவுமாறு பொருளாதார ஆலோசனைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார ஆலோசனைக் குழு, பொருளாதாரம் மற்றும் அது தொடர்பான விவகாரங்களில் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

இந்நிலையில் அண்மையில் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, பிரதமரின் முதன்மைச் செயலாளர் பி.கே.மிஸ்ரா, அமைச்சரவை செயலாளர் ராஜீவ் கௌபா, நிதிச் செயலாளர் டி.வி.சோமநாதன் உள்ளிட்ட பல முக்கிய இந்திய அதிகாரிகளை சந்தித்து இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எல்லைகளை நோக்கிச் செல்லுதல்

**முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு, மணற்கேணிக் கிராமத்தை மீட்டெடுக்க 40 வருடங்களின் பின்னர் காணி உரிமையாளர்கள்சிலர்முயற்சிகளைமுன்னெடுத்துள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தி வெளியாகி இருக்கின்றது. 1984ஆம் அண்டு படையினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் வரை அந்தக் கிராமத்தில் பூர்வீகக் குடிகளும் யாழ்ப்பாணத்திலிருந்து குடியேற்றப்பட்ட குடிகளும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால், இன்று பூர்விகக் குடிகளில் மிகச் சிலரே அங்கு மீளக்குடிய மர்ந்துள்ளனர். மற்றையவர்கள் போருக்குப் பின்னரான காலத்தில் ஊருக்குத் திரும்பவில்லை.**

**அவர்கள்போர்க்காலத்தில்நாட்டின்பல்வேறுபகுதிகளிலும் பரந்து, தங்கள் வாழ்விடங்களைக் கட்டமைத்துக்கொண்ட வகையில் ஊருக்குத் திரும்புவதற்கான ஊக்கம் இன்றி இருந்து வந்தனர். குறிப்பாக யாழ்ப்பாணம், கொழும்பு இன்னும்பிற நகரங்களில் வசதியான வாழ்க்கையை அமைத்துக்கொண்ட பின்னர் காடுகளுக்கு மத்தியில் வசதிகள் அற்ற இந்தக் கிராமத்துக்குச் செல்வதை அவர்கள் ஒரு பொருட்டாகக் கொண்டிருக்கமாட்டார்கள்.**

**அதுவும்போக கிராமங்களுக்குத் திரும்பி பிரச்சினைகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என்கிற எண்ணமும் அவர்களுக்கு இருந்திருக்கக்கூடும். ஆனால், அவையெல்லாம் அங்கே மீளக்குடியமர்ந்திருப்பவர்களுக்குப் பெரும் பிரச்சினையாக மாறியிருந்தது. ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளை வேறு தமிழர்களுக்குப் பிரித்துக்கொடுக்க தமிழ் அதிகாரிகள் முன்வர மாட்டார்கள். ஆனால் அந்தக் காணிகளைச் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக்கொண்ட பின்னர் அவற்றை அவர்களுக்கே சொந்தமாகக் கொடுக்கும்படி கொழும்பு உத்தரவிடும்போது, மேலிடத்துக் கட்டளை என்று அதனை நிறைவேற்றுவார்கள். இவ்வாறு மணற்கேணி போன்ற எல்லைக்கிராமங்களில்பூர்விகக்குடிகள்மிகக்குறைவான எண்ணிக்கையில் இருக்கும்போது அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கவேண்டிய குடியேற்றக்காரர்கள் அவர்களைக் கைவிட்டமையே எல்லைக் கிராமங்கள் இப்போது எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களுக்குக் காரணம்.**

**மணற்கேணியைச் சேர்ந்த 5 காணி உரிமையாளர்கள் இப்போது தமது காணிகளுக்குத் திரும்ப எடுத்துள்ள முடிவும் மற்றைய காணிக்காரர்களையும் தம்மோடு சேர்ந்து வருமாறு விடுத்துள்ள அழைப்பும் மிக முக்கியமானது. எல்லைக் கிராமங்களை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கவேண்டுமானாலம் தமிழர்கள் எல்லைகளை நோக்கி நகர வேண்டியது மிக மிக அவசியம்.**

**அது இலகுவான காரியமல்ல. அதுவொரு பெருந்திட்டம். அமைப்புமுறை ரீதியாக முன்னெடுக்கப்படவேண்டிய திட்டம். பெரும் நிதிப் பங்களிப்போடு இடையறாத ஊக்கத்தோடு நேர்த்தியான திட்டமிடலோடு முன்னெடுக்கப்படவேண்டிய திட்டம். அங்கு தமிழர்கள் மீளக்குடியமரவும் குடியேறவும் கொழும்பு ஆட்சி அனுசரணை வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதால் உட்கட்டுமான வசதிகள் உட்பட பொது வசதிகளையும் நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அளவுக்குத் நிதித் தேட்டத்தை நாடி நிற்கும் திட்டம். அது குறித்து புலம்பெயர் அமைப்புக்களும் நிதித் தேட்டமுள்ளவர்களும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.**

**இப்போதைக்கு முதற்கட்டமாக எல்லைக் கிராமங்களில் காணிகளைக் கொண்டிருப்பவர்கள் அங்கு தமது விவசாய நடவடிக்கைகளுக்குத் திரும்ப வேண்டும். அல்லது காணிகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்து வேறு யாருக்காவது கொடுக்கவேண்டும். அதன் மூலம் எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்வேண்டும். தமிழர்கள் எல்லைகளை நோக்கி நகர்வதன் மூலம் மட்டுமே எல்லைகளையும் உள்ளே கிராமங்கள் நகரங்களையும்கூடப் பாதுகாக்க முடியும்.**

# வங்கிக் கட்டமைப்பு மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும்

## நாலக கொடஹேவா எச்சரிக்கை



சர்வதேச நாணய நிதியத் தின் நிபந்தனைக்கு அமைய 13.1.39 ரில்லியன் ரூபா தேசிய கடனை மறுசீரமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனால் வங்கி கட்டமைப்பு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும் என சுயாதீன எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை சட்டமாக்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை அவதானத்திற்குரியது.

பொருளாதார மீட்சிக்கான எந்த திட்டங்களும் இல்லாமல் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளதால் நாணய நிதியம் முன்வைக்கும் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்துவதை தவிர வேறு வழியில்லை.

மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி சர்வதேச ஊடகத்திற்கு நாட்டின் பொருளாதார மீட்சி தொடர்பில் முக்கிய விடயங்களை குறிப்பிட்டுள்ளார்கள்.

இலங்கை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு(2024, 2025,2026,2027,2028) 21.9 பில்லியன் டொலர் அரச முறை கடன் மீள் செலுத்த வேண்டும்.

பிரதான நிலை கடன் வழங்குநர்களுடன் பேச்சுகளை மேற்கொண்டு கடன் தவணைக் காலத்தை மட்டுப்படுத்திக் கொள்ள அல்லது கடன் தொகையை குறைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

வெளிநாட்டு கடன்களை மாத்திரம் மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

13.1.39 ரில்லியன் ரூபா தேசிய கடனை மறுசீரமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த உண்மையை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தவில்லை.

தேசிய கடன் மறுசீரமைக்கும் போது வங்கி கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்படுவதால் வங்கி வைப்பாளர்கள் பாதிக்கப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய வைப்புக்கள் பாதிக்கப்படும். அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் நிச்சயம் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

மக்கள் போராட்டத்தைத் தடுப்பதற்காகவே அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டத்தை உருவாக்க விசேட கவனம் செலுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுவிட்டதால் பட்டாசு வெடித்து கொண்டாடுவதை விடுத்து மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். – என்றார்.

# உலக வங்கி பாராட்டு

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்களுக்கு உலக வங்கி பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இறுதிச் சுற்று பேச்சு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போதே உலக வங்கி பிரதிநிதிகள் மேற்கண்டவாறு பாராட்டு தெரிவித்திருந்தனர். நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவுதல், அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை, சமூகப் பதிவு போன்ற இலங்கையின் அபிவிருத்தி கொள்கைக்கான செயற்பாட்டுத் திட்டத்தை முழுமையாக்குவதற்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கு அவசியமான கால எல்லை என்பன தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது இலங்கையின் அபிவிருத்தி கொள்கை முன்னெடுப்புக்களுக்கு உலக வங்கி வழங்கும் ஒத்துழைப்பிற்கு பாராட்டுத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இந்த வேலைத்திட்டத்தை சாத்தியமாக்கிக் கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் சியோகன்தா உள்ளிட்ட உலக வங்கி பிரிதிநிதிகளும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் பேச்சில் கலந்துகொண்டிருந்தனர்.

# 25 ஆயிரத்து 577 மில்லியன் ரூபா தனியார் வருமான வரி வசூலிப்பு

## முதல் காலாண்டில் மட்டும்

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனிநபர் முற்பண வருமான வரியாக 25 ஆயிரத்து 577 மில்லியன் ரூபா வசூலிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின், ஜனவரி மாதத்தில் 3,106 மில்லியன் ரூபாவும், பெப்ரவரி மாதத்தில் 10,540 மில்லியன் ரூபாவும் மார்ச் மாதத்தில் 11,931 மில்லியன் ரூபாவும் தனிநபர் முற்பண வருமான வரியை அறிவிட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித்திணைக்கள மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதவற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட புதிய வரி கொள்கையை அடுத்தே இவ்வாண்டின் முதல் காலாண்டின் தனிநபர் வரி வருமானம் அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட வரிக்கொள்கையை எதிர்த்து அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள் என ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான சம்பளத்தை பெறுவோர் அண்மைக்காலமாக ஆர்ப்பாட்டங்களையும் பணிப் பகிஷ்கரிப்புகளையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த புதிய வரிகொள்கையின் காரணமாகவே, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இவ்வாண்டுக்கான முதல் காலாண்டு தனிநபர் முற்பண வரி வருமானம் அதிகரித்துள்ளமையால் எதிர்வரும் காலங்களில் அதிகளவான வரி வருமானம் வசூலிக்க முடிவது டன் நாட்டை பொருளாதார ரீதியாக அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல முடியும் என பொருளாதார நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# 40 எரிபொருள் நிலையங்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானம்

## கியு.ஆர். கடைப்பிடிக்காததால் காஞ்சன அதிரடி



தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்கான கியூ.ஆர். ஒதுக்கீடுகளை தொடர்ச்சியாக கடைப்பிடிக்காத 40 எரிபொருள் நிலையங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் ஆகிய–வற்றின் அதிகாரிகளுடன் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள் ளார்.

அத்தோடு ஏப்ரல் 15 ஆம் திகதிக்குள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் களஞ்சியங்களுக்கும் ஜி.பி.எஸ். கண்காணிப்பு அமைப்புகள் பொருத்தப்படும் என்றும், அதன்பிறகு அனைத்து தனியார் களஞ்சியங்களுக்கும் குறித்த நடைமுறை செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# காத்தான்குடிக்கு மாடுகளை கடத்திச் சென்றவர் கைது

## 6 மாடுகள் மீட்பு



பொலன்னறுவை கிரித்தலை பிரதேசத்தில் இருந்து காத்தான்குடி பிரதேசத்துக்கு சட்டவிரோதமாக லொறி ஒன்றில் எருமை மாடுகளைக் கடத்திச் சென்ற ஒருவரை காத்தான்குடி கடற்கரைவீதியில் வைத்து நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்ததுடன் 6 எருமை மாடுகள் லொறி ஒன்றையும் மீட்டு ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் டிலங்கவெலவின் ஆலோசனையில் சப்இன்பெக்ஸ்டர் ஆர்.எம்.ஆர்.சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினமான நேற்று அதிகாலை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிபிடித்து சோதனையிட்டனர்.

இதன் போது லொறியில் சட்டவிரோதமாக 6 எருமை மாடுகளை கடத்திச் செல்வதை கண்டுபிடித்து லொறியின் சாரதியை கைது செய்ததுடன் 6 மாடுகளையும் லொறியையும் மீட்டு ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.